



| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு கசுகூஉ, ஐப்பசி | பரல் |
|---|---|---|
| ஙசு | நவம்பர், 1961 | ங |


### சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்

# சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா

இவ்வரும் பெரு விழா சென்னை இராஜாஜி மண்டபத்தில் 1961 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 29 ஆம் நாள் ஞாயிறு காலை மாலை இரண்டு வேளைகளிலும் மிக்க சிறப்பாக நூலாலை மன்னரும் கல்விக்கொடை வள்ளலும் கலைஞரும் அறிஞருமாகிய உயர்திரு கருமுத்து தியாகராசச் செட்டியார் தனிப்பெருந் தலைமை யில் நடைபெற்றது. இதனடியில் அதன் விளக்கம் தரப்பட் டுள்ளது. முதற்கண் சங்க இலக்கியங்கள் ஏட்டுச் சுவடியில் அமைந்து ஒரு சிலரால் அரிதிற் பயிலப்பட்டு வந்தன, பின் அவைகள் அருந்தமிழன்னையின் பெருந்தவப் புதல்வராம் அறிஞர் பெருமக்களால் அவர்தம் பேருழைப்பின் பயனாக அச்சிடப்பட்டு வெளிவந்தமையும் அக்காலத்தும் மிகப்பலராய்ப் பயிலாமல் கல் லூரிப் பாடங்களுக்கு அமைந்த அளவில் கற்பாரும், கற்பிப்பாரும், புலவர் சிலரும் பயின்று வருவாராயினர். பலரும் எளிதினும் இனிதினும் பயில்வதற்கேற்ற சூழ்நிலைக் காலமாகத் திருவருளால் இந்நாள் அமைந்துள்ளது.

அஃதாவது நாடு நல்லுரிமை பெற்றுத் தமிழன்னை பண்டு போல் அரியணையமர்ந்து தமிழ் ஆட்சிமொழியாகவும், கல்லூரிப் போதனை மொழியாகவும் விளங்கித் திகழ்கின்ற பொன்னாளாக இந்நாள் அமைந்தமையே யாம். இந்நாளில் ஆசிரியர், மாணவர், புலவர் பெருமக்கள் ஆட்சித் துறையினர், அருங்கலைஞர், பெருஞ் செல்வர், பொதுமக்கள் பலரும் கற்கப் பேரன்பு பூண்டு முன்வந் துள்ளனர். இந்நாளில் அத்தகையார் அனைவர்கட்கும், இனி

தாகவும் எளிதாகவும் கிடைக்கும்படி சங்க நூல்களாகிய 'பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு' ஆகிய முப்பத் தாறு நூல்களும் கழக வாயிலாகச் சிறந்த விளக்கவுரையுடன் ஒருங்கு வெளிவந்துள்ளன.

'சங்கம்' பழம்பதியாம் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரைக்கண் நடந்து வந்ததென உரையாசிரியர்களாலும் அவர்கட்கு முன்னுள்ள சமயாசிரியர்களாலும் குறிக்கப் படும் குறிப்புக்களான் உணரலாம். சமயாசிரியர்களுள் அப்பர் பெருமானார் ஓதியருளியது வருமாறு :

"மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே"

—சு. எசு. ந.

இச்சங்கம் கடைச்சங்கமாகும். இச்சங்கம் இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த தென்ப. இச் சங்கக் காலத்துத் தோன்றிய நூல்கள் அனைத்தும் நமக்கு இப்பொழுது கிடைத்தில. அச்சங்கத்திறுதியிற் கிடைத்தவற்றை ஆன்றோர் தொகுத்து வரை செய்த அமைப்பாற் கிடைத்தனவே இம் முப்பத்தாறு நூல்களுமாகும். இவைகள் குறைவின்றி நிறைவொடு நிலவு தற்குத் தொகுத்த சான்றோர் வகுத்து யாத்த வெண்பாக்களே துணையாகவுள்ளன. அவை வருமாறு :

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை."

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

இவ்வெண்பாக்கள் இல்லையாயின் நாம் அந்நூல்களை முறை யுறக் காண்டற்கும் பதிப்பாசிரியர்கள் முயன்று தேடி விட்டு விடாது முழுவதும் நன்முறையாகப் பதிப்பித்து வெளியிடுவதற் கும் வாயில் வாயாது போயிருக்கும்.

கடைச் சங்கத்திற்குப் பலவாயிர யாண்டுகளுக்கு முன் இடைச்சங்கம் நிகழ்ந்த தென்ப. அச்சங்கத்துத் தோன்றிய இலக்கண நூலே ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பிய முனிவரால் செய்தருளப்பட்ட ஒப்புயர்விலாத் தனிப்பெருமாண் புடைய தொல்காப்பிய நூலாகும். இதற்கிணையான இலக்கண நூல் வடமொழியுள்ளிட்ட வேறெம்மொழியினும் இன்றுகாறுந் தோன்றவில்லையென்பது நடுநின்றாய்ந்து நன்முடிபு கண்ட நல்லோர் துணிபாம். இத்துணைச் சிறந்த இலக்கண நூல் தோன் றுதற்கு எத்துணையோ அளவிறந்த சிறந்த இலக்கிய நூல்கள் தோன்றியிருத்தல் வேண்டும். அவையொன்றும் இந்நாள் நாம் காணும் பேறு பெற்றிலோம். அவைகள் அழிந்தனவென்பதே துணிபு. அவைகள் அழிவதற்குக் காரணம் கடல்கோள் முதலிய கொடுமையும் இடப் பெயர்ச்சியுமாகும். இடைச் சங்கத்திற்குப் பலவாயிரயாண்டுகளுக்கு முன் தலைச்சங்கந் தோன்றி நடந்துள ளது. அச்சங்கத்துள்ள இலக்கண இலக்கிய நூல்கள் ஏதும் நமக்குக் கிடைத்தில.

இத்தகைய முச்சங்க வரலாறுகள் இறையனார் களவியல் நூலுரையிலும், சிலப்பதிகார நாலினும் உரையினும் முறையே விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. மேலும் சங்க நூல்களுக்கு உரைகண்ட 'நல்லுரையாசிரியர்கள்' இளம்பூரணர் சேனாவரையர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலியோர் தங்கள் உரைக்கு விளக்கமாக எடுத்துக் காட்டும் பல மேற்கோள் நூல்கள் இன்று நாம் காண்பதற்கில்லாமலிருக்கின்றன. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம் உரையின் கண் எடுத்துக்காட்டும் இசை நூல், நாடக நூல் முதலிய பலவும் இந்நாள் கிடைத்தில. இவ்வுரையாசிரியர்களின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டு வரை என்ப. ஏறத்தாழ ஆயிர யாண்டுகளுக்குப் பின்னேயுள்ள உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உரைகளைத்தான் நாம் காண் கின்றோம். இந்த ஆயிர யாண்டுகளும் அந்நூல்கள் உரை யின்றியே பயிலப்பட்டதென எண்ணுவதற்கிடனின்று. பின் னுள்ள உரையாசிரியர்களுக்கு அவ்வுரையும் வேறு பல கருவி நூல்களும், மரபுகளும் வழங்கி வந்தமை துணையாகவிருந்திருத்தல் வேண்டும். அவைகள் ஒரு சிற்றளவேனும் இந்நாள் காணமுடிய வில்லை. ஒன்றுமேயின்றிப் பயின்றுள்ளார் உரை வகுத்தனர்

என்பது பொருத்தமாகக் காணப்படவில்லை. எனவே அந்த நூல்களும் இப்போது கிடைப்பதற்கில்லை.

அளவிறந்த கிடைத்தற்கரிய உயிரினுஞ் சிறந்த நம் அருந் தமிழ் நூற் கருவூலங்களைப் பெயர்கூடத் தெரிவதற்கின்றி நாம் இருக்கின்றனம். கிடைத்த சங்க இலக்கியங்களாகிய முத்திறத்து முப்பத்தாறு நூல்களும் தொல்காப்பியமாகிய இலக்கண நூலொன்றும் தமிழர்களாகிய நம்மனைவர்கட்கும் எவ்வகை வேறுபாடுமில்லாத உரிய தொன்மை அழியாவுடைமையாகும். உடைமை - சொத்து.

இவ்விழுச்சீர் உடைமைகளை நம்முன்னோர் பனையோலைச் சுவடியில் கைவருந்த எழுதிக் கருத்தூன்றிக் கற்றும் கற்பித்தும் வந்தனர். இம்முறையும் வேற்றுப்புல மன்னர் வருகையாலும் அவர்கள் கொண்டு வந்து வலுகட்டாயமாகப் புகுத்திய ஆரிய முதலிய அயன்மொழி மயலாலும் நம்முன்னோர்களால் கைவிடப் பட்டது. எனவே இடைப்பட்ட காலத்துத் தமிழ் தழைத் தோங்க வழியின்றித் தடைப்பட்டது. அத்துடன் சங்க நூல் களைப் பற்றி அறிய வாராமையால் அவற்றைக் கற்கும் வாயிலும் அடைபட்டது.

பத்துப்பாட்டுள் முதற்கண் திகழ்வதாகிய 'திருமுருகாற்றுப் படை' சமய நூலாதலாலும், 'திருக்குறள்' செந்தமிழ்ப் பொது மறையாகச் சிறந்து திகழ்ந்தமையாலும் அவற்றைப் பலரும் விடாது பயின்று வருவாராயினர்.

ஏனைச் சங்கத் தமிழ் நூல்கள் இருந்த இடமும் எவருக்குந் தெரியாத நிலைமையில் அமைந்தன. காலஞ் செல்லச் செல்ல அவை யிருந்த விடங்களிலுள்ளார்க்குப் புலமை யின்மையாலும், அவர்கள் அச்சுவடியினை அவிழ்த்துப் பார்க்கும் நோக்கம் இன்மை யானும் அவர் தமக்கும் அவற்றைப் பற்றி ஒன்றுந் தெரியா அவலநிலை ஏற்பட்டுவிட்டது. அக்காலத்துத் தெய்வத் திரு வருளால் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களும், இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும், பிறரும் தோன்றி அரிதின் முயன்று அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தினர். இவை போன்று இன்னும் பழந்தமிழ் நூல்கள் பல துறையிலுமுள்ளன பல இருத்தலுங்கூடும். அவற்றை இஞ்ஞான்றுள்ள அருந் தமிழறிஞர்கள் முயன்று தேடி அச்சிட்டு வெளியிடுதல் அரும் பெருஞ் செயலாகும்.

பண்டைத் தமிழ்ச் சங்கத்தினைக் கழக மென்னும் பெயரானும் திருஞானசம்பந்தப் பெருமானுர் அருளியுள்ளனர். அது வருமாறு :

" திங்களம் போதுஞ் செழும்புனலுஞ்
செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும்
புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூட
லாலவா யின்க ணமர்ந்தவாறே " —க. எ. உ.

இப் பெயர் ஒற்றுமையால் கழகத்தாரும் பண்டைத் தமிழ்ச் சங்கம்போன்றே பழம்பெரும் புலவர்களின் நிழலுருவம், அவர்தம் கைச்சாத்து, அவர்தம் கடிதங்கள், கட்டுரைகள் முதலியனவும், மிகத் தொன்மையில் தொடங்கிய செய்தித்தாள்கள் நாள் கிழமை திங்களிதழ்கள் தொட்டு இன்றுகாறும் வெளிவந்துலவும் சிறந்த செய்தித்தாள்களும் பிறவும் பெரிது முயன்று தொகுத்துப் பெரு மக்கட்குப் பெரிதும் பயன்படும் பொருட்டு 'நூற்காட்சி' யொன் றமைத்து அதன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். அதுபோல் சங்கவிலக்கியங்களில் முப்பகுப்பாக விளங்கும் முப்பத்தாறு நூல்களும் 1818ஆம் யாண்டு தொட்டு அவ்வப்போது பலராலும் பலமுறையிலும் வெளிவந்துள்ள நூல்கள் அனைத்தையும் தொகுத்து அழகுற நூற்காட்சியில் வைத்துள்ளனர். இவை போன்ற தொகுப்பு மேலும் மேலும் நிகழ்ந்து கொண்டே யிருக்கிறது. சங்கவிலக்கிய வெளியீட்டுக்கால முறைகளை விரி வஞ்சிச் சுருக்கமாகத் தருகின்றோம்.

'கலித்தொகை' இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள் பதிப்பு 1887, 'பத்துப்பாட்டு' டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் பதிப்பு 1889, 'திருக்குறள்' ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பு 1864, 'திருக்குறள்' சரவணப்பெருமாளை யரவர்கள் பதிப்பு 1884, 'திருமுருகாற்றுப்படை' திரு. இலட் சுமணபிள்ளையவர்கள் பதிப்பு 1839, 'நற்றிணை' பின்னத்தூர் அ. நாராயணசாமியையரவர்கள் பதிப்பு 1915, 'அகநானூறு' உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் பதிப்பு 1923, 'திரிகடுகம்' புஷ்பரதச் செட்டியாரவர்கள் பதிப்பு 1887, 'திருக்குறள்' ஜெர்மன் முதலிய மேலைநாட்டு மொழிகளின் பதிப்பு 1856 முதல் இவ்வகையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இம்முறையாகச் சங்க நூல்களெல்லாம் காலமுறையாகப் பதிப்பிக்கப்பட்டு வந்துள்ளன. அவை முற்றும் நூற்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் சங்கவிலக்கியங்கள் முற்றும் சிறந்த விளக்க வுரையுடன் கழகத்தாரால் மட்டும் பதித்து வெளி யிடப்பட்டுள்ள தென்பதை ஈண்டு நினைவுறுத்துகின்றோம்.

அதனாலேயே 'சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா'வும் இத் துணைச் சிறப்பாக நிகழ்த்த நேர்ந்த தென்பதையும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

சங்க நூல்களின் விளக்கமாகப் பல பெரும் புலவர்கள் பற்பல பெயர்கள் சூட்டி யாத்துள்ள நூல்களெல்லாம் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'திருக்குறள்' ஒன்றினுக்கே நூற்றுக்கணக்கான விளக்கக் கட்டுரை நூல்கள் வெளிவந் துள்ளன வென்பது குறிப்பிடத்தக்கதாகும்

இவ்விழாவிற்கு அன்போடு விடுத்துள்ள ஆன்றோர் வாழ்த் துரைகளுள் மேற்குவங்க மேல் சட்டமன்றத் தலைவர் சுனித்குமார சட்டர்ஜி அவர்களின் வாழ்த்துரையுமொன்றாகும். அப் பெருந் தகையார் பல மொழிகளையும் நன்கு கற்றுணர்ந்த திறலர். அவர்கள் நம் தமிழ்மொழியினையுங் கற்றுக் கன்னித் தமிழின் தொன்மையினையும், இயற்கை இனிமை எளிமைகளையும், மென்மையினையும், சுருக்க விளக்கத் திட்பநுட்ப மேன்மை யினையும் உணர்ந்து உளமாரப் பாராட்டித் திகழ்கின்றனர். மேலும் அவர்கள் நம் சங்க நூல்களில் பெரிதும் ஈடுபாடுடை யவர்கள். அவர்கள் வாழ்த்துரையில் நம் சங்க நூல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்துக் கழகம் உலகுக்கு உதவுதல் வேண்டுமென்றும் அஃது உலகிற்குப் பேருதவியாகு மென்றும் அன்புடன் குறிப்பிட்டுள்ளார்கள். இயல்பாகவே ஆங்கில மொழிபெயர்ப்புப் பணியில் கழகம் ஈடுபட்டுப் பல நூல்கள் வெளியிட்டுள்ளது. இன்னும் வெளியிட்டுக்கொண்டு வருகின்றது திருவருட்டுணையால் திரு.சட்டர்ஜி அவர்களின் விழைவுமொழிப்படி முற்றும் வெளியிடும் வாய்ப்பு நேர்தல் வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம். இப் பெரியார் தம் அருமைப் பெயரைத் தூய தனித் தமிழ் மொழியாக 'நன்னெறி முருகன்' எனக் கைச்சாத்திட்டுள்ளார். இக் கைச்சாத்தினை 'மறைமலையடிகள் நூல்நிலைய'ப்பார்வையாளர் சுவடியிற் காணலாம். இதனால் அவர்தம் இயற்கைத் தமிழார்வம் நன்கு புலனாகின்றதன்றோ!

கழகத்தார் சங்க நூல்களையும் சிறப்பாகத் திருக்குறளையும் பலவகையாலும் உலகுக்குணர்த்திப் பரப்புதல் வேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் பல நூல்களை வெளியிட்டு வருகின்றனர். அவற்றுள் சில வருமாறு :

சங்கவிலக்கியங்களில் நனிமிகச் சிறந்தனவாயுள்ள மணி யனைய முந்நூறு பாடல்களை ஆய்ந்தெடுத்துச் '**சங்கவிலக்கிய இன்கவித்திரட்டு**' என்னும் பெயருடன் நூறு நூறு பாடல்

களுக்கு ஒரு நூலாக மூன்று நூல்கள் கழகத்தாரால் வெளியிடப் பட்டுள்ளன. அவற்றிற்கு ஆசிரியர் இளவழகனாரவர்கள் சிறந்த விளக்கங்கள் எழுதியுள்ளனர். அப்பாடல்களும் விளக்கங்களும் ஆன்றோர் பலரானும் பாராட்டப்பட்டுள்ளன.

சங்கநூற் புலவர்கள் வரலாறுகளை அந்நூல்களின் அகச் சான்றுகளுடன் காலவரையறைப்படி முறைப்படுத்துப் பதினாறு வரிசையாக வகுத்து அவற்றைச் 'சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை' எனும் பெயருடன் ஆறு பகுதிகளாகப் புத்தகம் ஆறு வெளிவந் துள்ளன. சங்ககால அரசர் வரிசையும் இரு பகுதிகளில் வெளிவந் திருக்கின்றது. மேலும் சங்கவிலக்கியங்கள் முப்பத்தாறும் நன் குணர்ந்து நல்வாழ்வெய்துதற் பொருட்டு அவற்றிற்குத் தனித் தனி மாநாடுகள் கூட்டி அவ்வம் மாநாடுகளில் நிகழ்ந்த தலைமை யுரை, சொற்பொழிவாளர்தம் கட்டுரைகள் புத்தக வடிவில் வெளி வந்துள்ளன.

சங்க இலக்கிய இன்கவித் திரட்டு மூன்று தொகுதிகளும் 'The Golden Anthology of Ancient Tamil Literature' என்னும் பெயருடன் மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன.

பத்துப்பாட்டு என்னும் நூல் Pattu Pattu என்னும் பெயருடன் ஆங்கிலத்தில் அச்சாகிக் கொண்டிருக்கின்றது.

திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பொதுமறை பலவேறு வகை வனப்புறு பதிப்பாக வெளிவந்துள்ளன. அவற்றுள் பரிசுப் பதிப்புக்கள் பல வெளிவந்துள்ளன. நாளொன்றுக்கு ஒவ்வொரு திருக்குறளாகச் சிறந்தவுரையுடன் நாட்குறிப்புக்கள் முப்ப தாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'திருக்குறள் தெளிவுரை' அழகிய பதிப்பாக இரண்டு நூறாயிரத்துக்கு மேலான படிகள் வெளிவந்துள்ளன 'திருக்குறள் உரைவிளக்கம்' என்னும் நூலும் வெளிவந்துள்ளது. 'திருக்குறள் தண்டபாணி விருத்தி யுரை' அறத்துப்பால் என்னும் சிறந்த நூலும் வெளிவந்துள்ளது.

இச் சங்க நூல்களனைத்தும் நம் தொன்மைக் கருவூலங்களாக அமைந்து விளங்கு மியல்பு போன்று நாகரிக வுலகவரங்கில் முன்மையாகவும், இருவழக்கிலும் அன்றுதொட்டு இன்றுகாறும் ஒன்றுபோல் நின்று நிலவும் தனிப்பெருந்தன்மை இயைந்த தாகவுந் திகழ்கின்றன. அதனால் அவையனைத்தையும் நம்மவர்கள் நன்கு கற்றுப் பயன் எய்துவார்களாக.

வாழ்க சங்க நூல்! வளர்க செந்தமிழ்!

---

# விழா நிகழ்ச்சி

நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி விழா 29-10-61 காலை 9 மணிக்குத் துவங்கிற்று. அந் நிகழ்ச்சிகள் முறையே பின் வருமாறு :—

## கடவுள் வாழ்த்து

**அருட்கவி சேதுராமன்** அவர்களாலும், அவர்தம் அருமை உடன்பிறந்தார் சுப்பிரமணியம் அவர்களாலும் திருமுறைத் திருப்பாடல்கள் இனிய பண்ணுடன் பாடப்பட்டன.

## வரவேற்புரை

கழக ஆட்சியாளர் **திரு. வ. சுப்பையா பிள்ளை** அவர்கள் மாநாட்டுத் தலைவரை நன்முறையாக வரவேற்று நிகழ்த்திய வர வேற்புரையின் சுருக்கம் வருமாறு :

முன்னாளில் சோமசுந்தரப்பெருமான் ஒருபெரும் புலவ ராய்ச் சங்கமிருந்து செந்தமிழை வளர்த்தார். அதுபோலவே இந்நாளில் கலைத்தந்தையார் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் மதுரையில் பல கல்லூரிகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்; கலைக் கல்லூரிகளையும், நுண்தொழிற் கல்லூரி களையும் நேர்ப்பார்வையில் நடத்தி வருகின்றார். மதுரையில் ஒரு பெரிய பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென்னும் பேரவாக் கொண்டுள்ளார்; அதற்கு வேண்டும் பெரும் பொருள்வைப்புக் கொடுக்கவும் முன்வந்துள்ளனர். இவர்கள் சென்னைக்கு எத்தனை முறையோ பல்வேறு செய்திகளின் பொருட்டு வந்து போயிருக் கலாம். ஆனால் இலக்கியக் கூட்டத்திற்காக வருவது இதுவே முதல் தடவை. மதுரையில் பல ஆலைகளை நடத்தி வருகின்ற இவர்களை நூலாலை மன்னர் எனலாம். பாங்கு ஒன்றையும், இன்சூரன்ஸ் கம்பெனி ஒன்றையும் நடத்தி வருகின்றார்கள். இவர் தம் நாவசைந்தால் நாடசையும். எதையும் இருந்தவிடத்தி லிருந்தே செய்து முடிக்கும் பேராற்றல் வாய்ந்தவர். சிறந்த அறிஞராயும் விளங்குகின்றார். பல கலைகளில் வல்லவராயுள்ளார். குறிப்பாகக் கட்டடக் கலையில் நுண்மாண் நுழைபுல அறிவு வாய்ந்து விளங்குகிறார். தொழிலாளர்களுக்காகப் பசுமலையி லும், பரவையிலும் இவர்களால் கட்டுவித்திருக்கும் தொழிலாளர் தம் குடியிருப்புக்கள் இவர்தம் கட்டடக்கலையார்வத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன. இவ்வளவு சிறப்புற்ற தலைவர் அவர்கள் இன்று தலைமை தாங்கும் பேறு கிட்டியது கழகத்தின் தவப்பேறேயாகும்.

இன்று திறப்புரையாற்ற வந்திருக்கும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கைலாசம் அவர்களும் தமிழில் இதுபோன்ற பேரவை மேடையில் பேசுவது இதுதான் முதல் தடவை. அவர்களை இவ்விழாவின் திறப்புரையாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

## திறப்புரை

நீதிபதி உயர்திரு. கைலாசம் அவர்கள் ஆற்றிய திறப்புரைச் சுருக்கம் :

தலைவர் அவர்களே, பெரியோர்களே,

சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழாவில் பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி. சங்கம் என்ற அருந்தமிழ் மொழியைக் கேட்டாலே தமிழனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. "பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை, நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலம்செய், துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச், சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்று பாடினார் தமிழ் மூதாட்டி ஒளவையார்.

கடைச்சங்கம் கி. மு. 300 முதல் கி. பி. 200 வரை இருந்து வந்தது. அக்காலத்தில் வாழ்ந்த எண்ணற்ற புலவர்கள் கவிதைகளைப் பாடினர். அவற்றுள் சிறந்தனவற்றைத் தொகுத்த தொகை நூல்களே இப்போது நமக்குக் கிடைக்கின்றன. அந்நூல்களில் நல்ல கருத்து, நடை, இனிமை முதலிய நூலின் குணங்கள் எல்லாம் உள்ளன. இக்காலத்தில் உலக இலக்கியங்களில் நாடகம், கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை முதலிய பலவகைகள் புகழ் பெற்றுள்ளன. சங்க இலக்கியம் அவற்றிற்கு எவ்விதத்திலும் குறைந்ததில்லை.

அக்காலத்து அரசர்களைப் பற்றியும், அக்கால அரசியலைப் பற்றியும் சங்கவிலக்கியங்களிலிருந்து அறிகிறோம். சங்கவிலக்கியங்களில் பல அறிவியல் கருத்துக்கள்-இக்காலத்து உயிரியல், செடியியல், விலங்கியல், வானியல், மண்ணியல் முதலிய அறிவியல்களின் அடிப்படைக் கருத்துக்கள் காணப்படுவன ஒரு பெருஞ் சிறப்பாகும். முதன்மையாகச் சங்கவிலக்கியத்தில் இயற்கையைப் பற்றிய செய்திகளைக் காணலாம். அக்காலத் தமிழர்வாழ்க்கை இயற்கையை ஒட்டி அமைந்திருந்தது. நூல்களும் அகம், புறம் எனப் பிரிக்கப்பட்டு இயற்கையோடு அமைந்திருந்தன. அந் நூல்களில் பலவகை விலங்குகளின் செயல்கள்-செடிகொடிகள் பற்றிய செய்திகள் முதலியவற்றைக் காண்கிறோம். தமிழிலக்கியம் சங்ககாலத்தில் உச்சநிலையை அடைந்திருந்தது.

பிற்காலத் துப் புலவர்கள் எல்லோருமே சங்கவிலக்கியத்தைக் கற்று, அதன் கருத்துக்களைத் தங்கள் நூல்களில் கையாண்டுள்ளனர். பெரும் புலவர்களான இளங்கோவடிகள், கம்பர், திருத்தக்கதேவர் முதலியோர் சங்கவிலக்கியத்தை நன்கு ஆய்ந்து கற்றிருக்கின்றனர். தமிழில் சங்கவிலக்கியம் படிக்காமல் ஒருவர் புலவராக இருக்க முடியாது.

சங்கவிலக்கியம் தமிழரின் நாகரிகம், பண்பாடு இவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மனித வாழ்க்கையையும் விலங்குகள், பறவைகள் முதலிய பிற உயிரினங்களின் வாழ்க்கையையும் அப்படியே சித்திரிப்பதில் சங்கப் புலவர்கள் கருத்துக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் சமயப் பூசல்களும், வேற்றுமைகளும் இல்லை. 'எல்லாரும் ஒரு சமயம்' என்ற தத்துவம்தான் அக்காலத்தில் இருந்தது. அக்காலத்தில் மக்கள் வாழ்க்கை மிக உயர்வாக அமைந்திருந்தது. அதற்குத் திருக்குறளே சிறந்த சான்றாக இருக்கிறது. அறம் மலிந்திருந்தது. அறம் என்ற சொல் தருமம் என்ற வடசொல்லைக்காட்டிலும் விரிந்த பொருளுடையது. தனக்குக் கெடுதல் செய்தாலும் அதை மறந்துவிட்டு அக்கெடுதல் செய்தார்க்கும் நன்மை செய்யும் நற்பண்பு தமிழர்களிடை இருந்து வந்தது. மனைவாழ்க்கையும், விருந்தோம்பும் சிறப்பும் அக்காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்தன. சங்ககால நாகரிகம் பாபிலோன், அல்சிரியா, கிரீசு போன்ற பழம்பெரும் நாடுகளின் நாகரிகத்திற்கு எவ்வகையிலும் குறைந்ததன்று.

இவ்வளவு சிறப்பியல்புகள் வாய்ந்த சங்கவிலக்கியங்களுள் இப்போது உரையுடன் கடைசியாகக் கழகத்தில் வெளியிடப் பெறுவது ஐங்குறுநூறு என்ற இலக்கியமாகும். இதில் ஐந்நூறு பாடல்கள் உள்ளன. இந்நூலை ஐந்து பெரும் புலவர்கள் ஆளுக்கு நூறு நூறு பாடல்களாகப் பாடியிருக்கின்றனர். பண்டைத் தமிழரின் நாகரிகத்தை விளக்கிக் காட்டும் சங்கவிலக்கியங்களை நாம் படித்து இன்புற வேண்டும்.

## தலைமை உரை

திறப்புரைக்குப் பின்னர் விழாத் தலைவர் கலைத்தந்தை உயர்திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் ஆற்றிய பேருரை பின் வருமாறு :

நீதிபதி திரு. கயிலாசம் அவர்களே, அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களே, கழக ஆட்சியாளர் திரு. சுப்பையாப் பிள்ளை அவர்களே, அன்பர்களே,

இப்பெரு விழாவில் தலைமை தாங்கும் பெருமையை எனக்கு அளித்துப் பாராட்டிய கழகத்தின் அன்பிற்குப் பெரிதும் நன்றி யறிதலுடையேன்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆயிரத்துக்கு மேற் பட்ட தமிழ் இலக்கிய நூல்களைச் செம்மையாக வெளியிட்டு அண்மையில் சிறப்பு விழாக் கொண்டாடியது; இன்று சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழாக் கொண்டாடுகிறது. இவ்வாறு தமிழுக்கு அரிய பணி ஆற்றிவரும் கழகத்துக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் கடப்பாடு உடையது.

தமிழ் மொழி தொன்மையும் இனிமையும் கொண்டது; என்றும் மாறா இளமையுடையது; வளமையும் தூய்மையும பொருந்தியது; மனமொழி மெய்களை முறையே பண்படுத்தும் இயல், இசை, நாடகம் என்ற முக்கூறுகளையுடையது.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்தையும், உளங் கவர் பத்துப்பாட்டையும், இயற்கைநலம் புனையும் எட்டுத் தொகையையும் தன்பால் கொண்டது; ஒப்புயர்வற்ற திருக் குறளையும், உள்ளத்தையுருக்கும் தேவார திருவாசகம் திருவாய் மொழி முதலிய அருட்பாக்களையும் உலகுக்கு ஈந்த பெருமை யுடையது.

நீரால், நெருப்பால், கரையானால், காலத்தால், பகைவரால் அழிந்து மறைந்தன போக எஞ்சிய இவை இன்று நாம் பெற்றுள்ள மதிப்பிலாக் கருவூலமாகும்.

இவை கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடியினராம் தமிழ் மக்களின் நாகரிகத் துக்கும் பண்பாட்டுக்கும் ஏற்ற சான்றாகும்.

சங்கம் கண்டு மொழி வளர்த்த தனிப் பெருமையும் சிறப்பும் தமிழர்க்கே உரியன.

தமிழ் கூறும் நல்லுலகம், வீங்குநீர் அருவி வேங்கடம், தேன்சொரியும் கொல்லி, தென்றல் வளரும் பொதியில், தண் கானற்கோடை முதலிய ஓங்குயர் மலைகளையும், காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை முதலிய அழகிய ஆறு களையும் குண, குட, குமரிப் பெருங் கடல்களையும், பெருந் தண் காடுகளையும், கருமுகில் தவழும் பெருமதில் கருவூர், கல்வியிற் கரையிலாத காஞ்சி, அறம் துஞ்சு உறந்தை, பெரும் புனல் அலைக்கும் வஞ்சி, பொருள்மலி புகார், முத்துப்படு கொற்கை, பைந்தமிழ் மதுரை முதலிய பயன்கெழு மாநகர்களையும், பரங் குன்றம், பழமுதிர்சோலை, சீரலைவாய், திருவாவினன்குடி, ஏரகம்

முதலிய திருக்கோவில்களையும், தெய்வப்புலமைத் திருவள்ளுவரையும், தொல்காப்பியர், கபிலர், பரணர், ஔவையார் முதலிய நல்லிசைப் புலவர்களையும், திருமூலர், காரைக்காலம்மையார், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், ஆண்டாள் முதலிய சமயச் சான்றோர்களையும், சேர, சோழ, பாண்டியராகிய முடிகெழு வேந்தர் மூவரையும், பெருங்குடி வணிகர்களையும், அருந்தொழில் மக்களையும், தன்னகத்தே கொண்டு விளங்கியது, தமிழ் இலக்கியங்களின் ஏற்றத்துக்கு மூலகாரணமாகும்.

தமிழ்நாடு, மூவேந்தரின் முறைபிறழாத ஆட்சியால், பசியும் பிணியும் பகையும் இன்றி, வசியும் வளனும் உறவும் மிகுந்து, திருவும் கல்வியும் பெருகிச் சிறப்புற்று விளங்கியதைக் கூறும் இயல்பினால், சங்க இலக்கியங்கள் உயர்வும் பெருமையும் பெறுகின்றன.

அரசியல்மாட்சி, நீதி, பண்பாடு முதலியவற்றை,

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதில் பதன் எளியோர், ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல் பெற்றோர்"

என்றும்,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம், அதனால்,
யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"

என்றும்,

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம், அதனால்,
நமர்எனக் கோல்கோடாது பிறர்எனக் குணம்கொல்லாது"

இறைபுரிதல் வேண்டும் என்றும் புறநானூறு நயம்படக் கூறுகிறது.

அரசு வரிப்பொருள் வாங்கும் முறையை,

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்;

மெல்லியன் கிழவனாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே''

என்று புறநானூறு நன்கு அறிவுறுத்துகின்றது.

அரசு, மக்கள் உரிமைக்கும் அறத்துக்கும் மாறான விதி முறைகள் வகுப்பதைக்,

''கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து''

என்றும்,

அரசு, மக்களுடைய கருத்தை அவ்வப்போது அறிந்து முறைசெய்யாதவிடத்துத் தேய்ந்து அழியும் என்பதை,

''நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்''

என்றும் வள்ளுவர்பெருமான் முறையே வருந்தியும் இரங்கியும் கூறுகின்றார்.

வாழ்க்கையை அகமும் புறமுமாக வகுத்துக் கூறுவது தமிழர்கட்கே யுரிய தனிப்பெருஞ் சிறப்பாகும்.

அகவாழ்வு என்பது காதலர் இருவர் கருத்து ஒருமித்து இன்புற்று வாழ்வது.

காதலின் சிறப்பை வியந்து சங்க இலக்கியங்கள் கூறும் அழகையும் நயத்தையும் ஒரு சிறிது காண்போம்.

காதலன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து வருவது என்ற கருத்தைக் குறுந்தொகையில்,

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் எம் கணவனை
யானாகியர் நின்னெஞ்சு நேர்பவளே''

என்றும்,

நற்றிணையில்,

''சாதல் அஞ்சேன், அஞ்சுவன், சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவ தாயின்
மறக்குவென்கொல் என் காதலன் எனவே''

என்றும்,

திருக்குறளில்,

"இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனக்
கண்ணிறை நீர்கொண் டனள்"

என்றும்,

குறிஞ்சிப்பாட்டில்,

"இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம் அறிவுறலின் பழியும் உண்டோ?
ஆற்றின் நேரா ராயினும் ஆற்ற
ஏனை உலகத்து இயைவதால் நமக்கென
மானமர் நோக்கம் கலங்கிக் கையற
ஆனச் சிறுமையள் இவளும் தேம்பும்"

என்றும் வரும் கூற்றுக்கள் ஆயுந்தோறும் ஆயுந்தோறும் இன்பம் பயப்பனவாகும்.

மகளிர் காதல், கணவன் உயிரோடு பின்னிக்கிடந்து, பிறவி தோறும் தொடரும் என்பது பண்டைத் தமிழர் கருத்து.

இதனை,

"மன்னவன் செல்வுழிச் செல்க யான்எனத்
தன்னுயிர் கொண்டு அவன்உயிர் தேடினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்று இளங்கோவடிகள் உரைப்பதாலும் காணலாம்.

இதனால், பண்டைத் தமிழ் மக்கள், காதலொழுக்கத்தை மண்ணினும் விண்ணினும் மேலாக மதித்து உயிரினும் ஓம்பி இன்புற்று இனிது வாழ்ந்தனர் என்பது புலப்படுகின்றது.

ஒருவனும் ஒருத்தியும் தனித்துக் கண்டு காதல் உறுவது களவு என்றும், நாடறிய நன்மணம் செய்துகொள்வது கற்பு என்றும் சங்க நூல்கள் கூறுகின்றன.

இக்களவும் கற்புமாகிய இருவகை ஒழுக்கங்களைப் பொருளாகக் கொண்ட நம் அகப்பாட்டுக்களைப் பிற எம்மொழிகளினும் காண்டல் அரிது.

அகப்பாட்டின் அருமையைப் புலப்படுத்துவதற்குச் சிவபெருமானே புலவராய்ச் சங்கமேறித் தமிழ் ஆராய்ந்தார் என மணிவாசகப்பெருமான்,

"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலில் ஆய்ந்த
ஒண் தீந்தமிழ்"

என்று உரைப்பதால் உணரலாகும்.

இனி, புறம் என்பது, அறமும் பொருளும் அரசும் கல்வியும் உழவும் தொழிலும் வாணிகமும் பிற ஒழுக்கமுமாம்.

அறத்தின் சிறப்பை,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்பதனாலும்,

பொருளின் சிறப்பை,

"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

"பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

என்பவற்றாலும்,

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம்"

என்பதனாலும்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்பதனாலும்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்பதனாலும்,

அறிவின் சிறப்பை, வேறு எம்மொழியிலும் கூறப்படாத முறையில்,

"அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார்
என் உடையரேனும் இலர்"

"அறிவிலான் தான்தன்னைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது"

என்பவற்றாலும்,

அரசின் சிறப்பை.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்பதனாலும்,

"ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்து அமைவு இல்லாத நாடு"

என்பதனாலும்,

உழவின் சிறப்பை,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்பவற்றாலும் இனிதே அறியலாம்.

இனி, இன்று வெளியிடப்படும் ஐங்குறுநூறு பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

குறிஞ்சி நெய்தல் முல்லை மருதம் பாலை என நிலவுலகை ஐந்திணையாக வகுத்து, ஆங்காங்கு வாழும் மக்கள் ஒழுக்கத்தை ஐவகை நிலத்துக்கேற்ப, ஐவகைப்படுத்திக் கூறும் முறை தமிழ் இலக்கியத்தில் காணப்படும் தனிச்சிறப்பு. திணைக்கு நூறாக, ஐந்து பெரும்புலவர்களால் பாடப்பெற்ற ஐந்நூறு பாடல்களின் தொகுதியே ஐங்குறுநூறு. இது, மிகச் சுருங்கிய அடிகளில் விரிந்த பொருளைத் திட்ப நுட்பம் செறிய விளக்கும் நூலாகும்.

அகப்பொருள் இலக்கணங்களைத் தெள்ளிதின் விளக்குதற் கேற்ப முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்ற மூன்றையும் ஏற்றவாறு அமைத்துக் கூறுகின்றது.

இதனை,

"அன்னாய் வாழிவேண்டு அன்னை நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவல் கீழ
மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே"

என்ற இப்பாட்டில் காணலாம். இது குறிஞ்சித் திணைக்குரியது. உடன்போய் மீண்ட தலைவி, நீ சென்ற நாட்டில் நீர் இனிதல்லவே என்ற தோழிக்குக் கூறியது

தாய்வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் தேனோடு கலந்த பாலினும், கணவன் நாட்டின் சருகு படிந்த பள்ளத்தில் மான் உண்டு கழித்த கலங்கல் நீர் இனிமையுடையது என்று கூறுவதனால் தலைவியின் காதல் சிறப்பையும், பாலொடு தேன் கலந்து அருந்தும் பழந்தமிழர் வழக்கத்தையும் தான் புகுந்த நாட்டின் பாற் கொண்ட பற்றையும் தெளிவாகக் காணலாம்.

இனி, தாய் தன் அன்புடை மகளைப் பிரிந்து அவள் விரும்பிப் போற்றிய பாவை, கிளி, பூவை ஆகியவற்றைக் காணுந் தோறும் கலங்கி மொழிவதை,

"இதுஎன் பாவைக்கு இனிய நன்பாவை
இதுஎன் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இதுஎன் பூவைக்கு இனியசொல் பூவை என்று
அலமரும் நோக்கின் நலம்வரு சுடர்நுதல்
காண்டொறும் காண்டொறும் கலங்கி
நீங்கினளோஎன் பூங்க ணோளே"

என்ற பாட்டு உள்ளம் உருகச் சித்திரிக்கின்றது. இது பாலைத் திணைக்குரியது. இதனால் பெற்ற தாயின் பேரன்பையும், குழந்தைகள், பதுமை, கிளி, மைனா முதலியவற்றோடு விளையாடும் பழக்கத்தையும் அறியலாம்.

இந்நூலின் சிறப்பை இதனை வெளியிடும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள், ஆதலின் நான் அதனை விரித்துரையாது விடுகின்றேன்.

சங்க இலக்கியத்தைச் சிறப்பிக்கும் இப்பெரு விழாவில் எல்லோர்க்கும் அச்சத்தையும் அவலத்தையும் கவலையையும் கலக்கத்தையும் கொடுக்கும் ஒரு கொடுஞ்செய்தியைப் பற்றிக் குறிப்பிடாமல் என் தலைமையுரையை முடித்தல் முறையாகாது.

நாட்டின் ஒற்றுமைக்காக முன்பு ஒரு மொழி வேண்டுமென்றனர். இப்பொழுது எல்லா மொழிகட்கும் ஒரே எழுத்து வேண்டும் என்கின்றனர். இனி ஒரே சமயம் வேண்டும் என்று கூறினும் கூறுவர்.

எல்லா மொழிகட்கும் ஒரே எழுத்து வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும் அறியா மாக்கள், மொழியின் அடிப்படை, அமைப்பு, நுட்பம், மரபு, வரலாறு, இலக்கணம் முதலியவற்றை அறவே தெரியாதவர் என்று துணிந்து கூறலாம்.

ஒரு மொழிக்கு உடம்பாவது எழுத்து. உடம்பு அழியின் உயிர் அழிவதுபோல, எழுத்து அழியின் மொழியும் அழிந்து

ஒழிந்து மறையும். எழுத்திலக்கணம் நம் தமிழ் மொழிக்கே யுள்ள தனிச் சிறப்பாகும். இது வேறு எம்மொழிக்கும் இல்லை யென்பது மறுக்கொணு உண்மை.

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் எழுத்தின் இலக்கணத்தை ஒன்பது இயல்களில் 483 நூற்பாக்களால் விளக்கி யிருக்கின்ருர். அவரே, 'என்மனர் புலவர்'' என்றும், "என்ப" "மொழிப" என்றும் சொல்லியிருப்பதனுல், அவருக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுத்திலக்கணம் இருந்தது என்பது தெளிவாகின்றது.

தேவநாகரி அல்லது ரோமன் எழுத்து நம்மேல் சுமத்தப் படுமானல், நம் முன்னேர்களிடமிருந்து நமக்கு வழி வழியாக வந்துள்ள பெறற்கரிய செல்வமாகிய எழுத்தையும் அதன் இலக்கணத்தையும் பறிகொடுத்து இழக்க நேரிடும்.

உலகில் தமிழ் மொழியும் எழுத்துமே முதன் முதலில் தோன்றின என்பதும், பேச்சளவில் மட்டுமே இருந்த ஏனைய மொழிகள் எல்லாம் தமிழர் தொடர்பு பெற்ற பின்னரே வரி வடிவத்தைப் பெற்றன என்பதும் மொழிநூலும் வரலாறும் கூறும் உண்மையாகும்.

மேனுட்டு மொழிகள் பல ஒரே இனத்தைச் சேர்ந்தவை யாதலால், அவை ஒரே வரி வடிவத்தைப் பெற்றுள்ளன. தமிழ் ஒரு தனி இன மொழியாதலால், அதனை வேறு எழுத்துக்களால் எழுதுதல் முற்றும் முடியாததாகும். உதாரணமாக, தமிழ் என்ற சொல்லையே தேவநாகரியிலோ உரோமனிலோ, எழுதுதல் இயலாது. ழகரவொலி தமிழுக்கே சிறப்பாக உள்ள தொன்று.

> "வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்ற தொல்காப்பிய நூற்பாவால் தமிழுக்கு வேற்று மொழி எழுத்தை மேற்கொள்வது இலக்கண வழுவென்பது தெளிவாகும்.

ஒரு மொழியைக் கற்க விரும்புவோர் அதற்குரிய எழுத்துக் களின் வாயிலாகப் படிப்பதே சிறப்பாகும். தமிழ்மொழியில் ஆறு உயிரெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களும் ஓர் ஆய்த எழுத்தும் ஆக இருபத்தைந்து வடிவெழுத்துக்களே உள்ளன. இதனைப் படிப்பது கடினமாகுமா?

ஒரே எழுத்தாலும் மொழியாலும் ஒற்றுமை ஏற்படும் என்று எண்ணுவது, "ஏதம் கொண்டு ஊதியம் போகவிடும்" பேதைமையாகும். அது, கருதும் ஒற்றுமைக்கு மாருக வெறுப்பும்

பகையுமே உண்டாக்கும். கொடுக்கும் மருந்து குணம் இன்றிக் குற்றம் பயக்குமாயின், அதனை மாற்றுவதன்றோ மருத்துவனின் அறிவுடைச் செயலாகும். இங்கோ நோயும் இல்லை; மருந்தும் வேண்டுவதில்லை.

ஒரே எழுத்து ஒரே மொழி வழங்கும் உத்தரப்பிரதேசத்திலும், மேலை நாடுகளிலும் ஒற்றுமை நிலவுவதைக் காண்கிலோம். ஆகவே, ஏனோ இப்பயனில் முயற்சி!

தமிழுக்கு வரும் இப்பேரிடரைத் தடுத்துப் போராட வேண்டியது தமிழர்களின் தலையாய கடனாகும்.

இதுகாறும் எத்துணையோ இடுக்கண்களையும் இடர்ப்பாடுகளையும் அழிவுகளையும் எதிர்த்து வென்று நின்று நிலைத்து நிற்கும் கன்னித் தமிழ் என்றும் பொன்றாப் புகழுடன் பொலிந்து சிறந்து வாழ்வதாக.

**வாழ்க தமிழ் மொழி. வாழ்க தமிழர்.**

## வெளியீட்டுரை

கழகவழியாகச் சங்க இலக்கியங்களின் வெளியீட்டை நிறைவு செய்யும் ஐங்குறுநூற்றை (உரையுடன் கூடியது)த் தமிழக உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டருளிச் சொற்பொழிவாற்றினர். அதன் சுருக்கம் வருமாறு :

தலைவர் அவர்களே, தமிழ்ப் பெருமக்களே,

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் சங்க இலக்கியங்கள் எல்லாம் சீரிய பதிப்புக்களாக வெளியிடப் பெற்றிருக்கின்றன. இப்போது வெளியிடப்பெறும் ஐங்குறு நூற்றுடன் சங்கவிலக்கியங்கள் எல்லாம் உரையுடன் வெளியிடப்பட்டுவிட்டன. மக்கள் எல்லோரும் இன்புற்று வாழவே விரும்புகின்றனர். இன்ப வாழ்க்கைக்குப் பொருள் வேண்டியதே. ஆனால் பொருள் மட்டும் இன்ப வாழ்வுக்குப் போதாது. கலைகளும் இலக்கியங்களும் வேண்டும். சங்க இலக்கியம் போன்ற சிறந்த இலக்கியங்களைப் படித்துச் சுவைக்கும் அனுபவம் ஏற்பட்டுவிட்டால் அதனால் கிடைக்கும் இன்பம் மிகப் பெரிதாகும்.

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று பல மொழிகளைக் கற்றறிந்த பாரதியார் பாடியதுபோல் தமிழில் மிகச் சிறந்த இலக்கியங்கள் உள்ளன. சில காலத்திற்கு முன்பு சங்கவிலக்கியங்களில் எதுவும் நமக்குக் கிடைக்காமலிருந்

தது; அவையெல்லாம் ஏட்டுச் சுவடிகளில் புதைந்து கிடந்தன மூதன் மூதலாக டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் ஏட்டுச் சுவடிகளை யெல்லாம் தேடிச் சங்கவிலக்கியங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டார். அவரைப் போலவே உலகமெல்லாம் சங்க விலக்கியங்களை அனுபவிக்கும் வகையில் கழகம் வெளியீட்டுப் பணியை மேற்கொண்டது. உரைகள் எழுதப்படாத சங்க நூல்கள் எல்லாவற்றிற்கும் உரை எழுதுவித்து வெளியிட்டிருக்கின்றது. இவ்வகையில் கழகம் செய்திருக்கும் ஒப்பற்றபணி மிகவும் போற்றற் குரியது.

உலகிலேயே இலக்கியவளம் மிகுந்திருக்கும் ஆங்கில மொழியில் உள்ள பழைய இலக்கியங்களையும் 17, 16, 15 ஆம் நூற்றுண்டு இலக்கியங்களையும்கூட நாம் தனி ஆசிரியர்களின் உதவியின்றிப் படிக்கமுடியாது. ஆங்கில மொழி அவ்வாறு நூற்றுண்டுக்கு நூற்றுண்டு பல்வேறு வேறுபாடுகளை அடைந்து கொண்டேயிருநதது. ஷேக்ஸ்பியர் நாடகங்களைக்கூட நாம் எளிதில் படித்துப் புரிந்துகொள்ள முடியாது. ஷேக்ஸ்பியரின் இலக்கணமே தனிப்பட்டதாக இருந்தது. ஆனுல் தமிழிலக்கியத்தைப் பொறுததவரை அவ்வளவு வேறுபாடுகள் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாயினும் சங்க விலக்கியங்களை நாம் படித்துப் புரிந்துகொள்ளலாம். இது கன்னித் தமிழின் சிறப்புக்களுள் ஒன்ருகும்.

சிலபேர் தவருக ஒன்றைக் கருதிவருகின்ருர்கள். அதாவது தமிழ் என்ருல் நமக்கு எல்லாம தெரியும், படிக்கவேண்டியதில்லை என்று நினைக்கிருர்கள். இது தவறு, ‘சற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு’ என்று கலைமடந்தை கூறுவதாக ஔவைப்பிராட்டியாரே பாடியிருககின்ருர். இவ்வாக்கியமும் தமிழிலேதான் உள்ளது. எனவே தமிழை எலலாம் முற்றக் கற்றுவிடுவது ஒருவருக்கு முடியாது ஒவ்வொருவரும் தம் வாழ் நாளில் தம் பண்டைப் பெருமைகளுக்குச் சான்ருக விளங்கும் சங்க இலக்கியங்களைப் படித்து இன்புறவேண்டும்.

## டாக்டர் உ. வே. சா. படத்திறப்பு

முதுபெரும் புலவர், தென்கலை வல்லுநர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, ஐயரவர்களின் மாணுக்கா கி. வா. ஜகந்நாதன அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் :

டாக்டர் ஐயரவர்கள் அக்காலத்துப் பெருந் தமிழ்ப் புலவர்களிடம் பாடம் கேட்டு வித்தகப் புலமை யடைந்தவர். அவர்

காலத்தில் சங்க இலக்கியம் என்றால் யாருக்கும் தெரியாது. தமிழ் கற்பவர்கள் கம்பராமாயணம், நைடதம், நன்னூல் முதலிய சில நூல்களையே பேரிலக்கியங்களாகக் கருதிப் படித்து வந்தனர். சங்கவிலக்கியங்களைப் பற்றி ஐயரவர்களின் ஆசிரியப் பெருந்தகை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கே தெரியா திருந்தது! அவர்கள் பாடம் கேட்டுவரும்போது 'பதிற்றுப் பத்து' என்ற சொல் வந்தது; உடனே ஐயரவர்கள் அந்நூலைப் பற்றி மகாவித்துவான் அவர்களிடம் வினவினார். 'அஃது ஏதோ ஒரு பதிற்றுப் பத்தந் தாதியாக இருக்கும்' என்றுதான் மகா வித்துவான் விடையிறுத்தார். அது சங்க நூல்களுள் ஒன்று என்பது அக்காலத்தில் பல்லாயிரம் தமிழ்க் கவிகளை மழையெனப் பொழிந்த மகாவித்துவான் அவர்களுக்கும் தெரியாமல் போனது வியப்பே. அக்காலத்தில் தமிழர்கள் சங்கவிலக்கியங்களை மறந் திருந்தனர் என்பதையே இது காட்டுகிறது.

பிற்காலத்தில்தான் ஐயரவர்கள் தாம்பெற்ற முழுவாழ்வுக் காலத்தில் சங்க இலக்கியங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் தேடியாராய்ந்து பதிப்பித்துச் சிறப்புற வெளியிட்டார் சங்க விலக்கியத்தைத் தமிழ் நாடு முழுவதும் சுவைக்கச் செய்தார். 'தமிழ்த் தாத்தா' என்று தமிழ்நாடு அவரைப் போற்றுகிறது. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும் பேற்றை எனக்களித்தமைக்காகக் கழகத்திற்கு என்னுள்ளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐயரவர்களின் கரம் பலகாலம் மறைந்துகிடந்த நூல்களை யெல்லாம் வெளிக் கொணர்ந்த திருக்கரம். இன்று நாமெல்லாம் சங்க இலக்கியம் என்றால் தலைநிமிர்ந்து பெருமைப்படுகிறோம். அதற்குப் பாடுபட்டவர் ஐயரவர்களே. சங்கவிலக்கியங்கள் பழமையுடையன வாயினும் பயனால் புதுமையுடன் விளங்கு கின்றன. பழையன வெல்லாம் நன்றாகும் எனச் சொல்ல முடியா தாயினும், சங்கவிலக்கியம் தமிழரின் தனிச்சிறப்புக்கு இணை யில்லாத எடுத்துக்காட்டாய் விளங்குவதால் பெருமை பெற் றிருக்கிறது.

சைவத்திற்கும் சங்க நூல்களுக்கும் ஒருவகைப் பொருத்தம் இருக்கிறது. சைவ சமயத்தில் 36 தத்துவங்கள் இருக்கின்றன. சங்கநூல்களின் எண்ணிக்கையும் முப்பத்தாறே. எட்டுத் தொகை நூல்களுள் மிக அதிகமான எண்ணிக்கையுடைய பாடல்களைக் கொண்டது ஐங்குறுநூறே. இதில் 500 பாடல்கள் உள்ளன. பாடல்கள் எல்லாம் சின்னஞ்சிறியனவாக, 3 முதல் 6 அடிவரை அமைந்தனவாய் உள்ளன. அதன்கண் உள்ள கடவுள் வாழ்த்து மூன்றே அடிகளால் ஆனது.

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

என்பதுதான் அக் கடவுள் வாழ்த்து. சைவசித்தாந்தத்தின் முப்பத்தாறு தத்துவங்களேயும் சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் என்ற மூன்று பாகுபாட்டினுள் அடக்குவர். இப் பாட்டில் 'மூவகை'யுலகு பேசப்படுகிறது. எப்படியோ சைவ சித்தாந்தத்திற்கும், சங்க விலக்கியத்திற்கும் தொடர்பு இருப்பது காணப்படுகிறது. ஐங்குறுநூற்றிலிருந்து ஒரு பாட்டைப் பார்க்கலாம்.

தலைவியைப் பலநாட் பிரிந்து சென்று பரத்தையிடம் வாழ்கின்றான் தலைவன். பிறகு அப்புறத்தொழுக்கம் தகாது எனத் திரும்பி வந்து இல்லறம் நடத்துகின்றான். அப்படிப் பிரிந்திருந்த காலத்தில் 'என்னைப்பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்கள்' என்று தலைவன் தோழியைப்பார்த்துக் கேட்கிறான். அப்போது தோழி கூறிய விடை தோழி, தலைவி அவர்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. அப்பாட்டு இதுதான்,

"வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே"

தலைவன் பிரிந்து சென்றாலும் அவன்மேல் சினங்கொள்ளாது தலைவன் வாழட்டும்; தலைவன் வாழ்ந்துவரும் நாடும் வாழட்டும் என்று தலைவியும் தோழியும் வாழ்த்திக்கொண்டே வாழ்ந்திருக்கிறார்கள். இப் பரந்த மனப்பான்மையே தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பு நிலையாக விளங்குகிறது.

இலக்கியப் பேரின்பத்தை யளித்துத் தமிழ்ப் பண்பாட்டின் வெற்றியை அறிவிக்கும் சங்கவிலக்கியங்களை வெளிக்கொணருதற்காக இடையறாது உழைத்த பெருந்தகை ஐயரவர்களைத் தெய்வமெனப் போற்றி வணங்குகிறேன்.

## பத்துப்பாட்டு

அடுத்துப் 'பத்துப்பாட்'டைப் பற்றி மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் திரு. சி. இலக்குவனார் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்:

சில பத்தாண்டுகட்கு முன்பு சங்கவிலக்கியங்கள் பயனில்லாதன என்று கருதிக்கொண்டிருந்தனர். இலக்கியம் என்ற பெயருக்கே தகுதியில்லாதவை என்று ஒருவர் பேசக் கேட்டயான் அடுத்தநாளே சங்கவிலக்கியத்தை மக்களிடையே பரப்ப வேண்டுமென்று எண்ணித் தனி இதழ் ஒன்றை நடத்தத் தொடங்கினன். சங்கவிலக்கியத்தைப் பற்றி மக்கள் ஓரளவு நன்கு தெரிந்துகொண்ட பிறகு அவ்விதழை நிறுத்திவிட்டேன்.

சங்க நூல்கள் பழந்தமிழரின் பண்பாட்டையும், வரலாற்றையும் கூறுவனவே யாகலின், நல்ல இலக்கியங்களாகா என்று கருதினர். ஆனால் சங்கநூல்கள் இலக்கியமாகவே எழுதப் பட்டன. ஆங்கிலத் திறனாய்வாளர் ஆபர்கோம்பி என்பவர் இலக்கியப் படைப்பாளரைப் போலவே இலக்கியத்தைச் சுவைப்பவரும் புலமையுடையவரா யிருக்கவேண்டும் என்பார். அப்படிப் புலமைவாய்ந்தவ ரில்லாமையாலேயே சங்க நூல்கள் இலக்கியமாகா என்ற கருத்து நிலவிவந்தது என எண்ண வேண்டியிருக்கிறது. சங்கநூல்கள் பிற்காலத்து யமகம், திரிபு, அந்தாதி முதலிய பிரபந்தங்களைப் போலப் படித்துப் பொருளுணர்தற்குக் கடுமையானவையல்ல.

தொல்காப்பியர் காலம் கி. மு. 7 ஆம் நூற்றாண்டு என்பது என் கொள்கை. பத்துப்பாட்டில் ஈற்றில் உள்ள கூத்தராற்றுப் படை தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட நூலாகும். தொல்காப்பியமே ஓரிலக்கணமாயும் ஆராய்ச்சி நூலாகவும் இருக்கிறது. கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் என்பவர் தாம் இயற்றிய (Poetics) 'கவிதையியல்' என்ற நூலில், கவிதைகளை யியற்றுவோர் மொழியின் எழுத்தையும், சொல்லையும் பற்றி அறிந்திருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். எழுத்தையும், சொல்லையும் பற்றிச் சுருக்கமாக உரைத்துள்ளார். தொல்காப்பியரோ எழுத்தையும் சொல்லையும் பற்றி மிக விளக்கமாகவே எழுதியுள்ளார். தொல்காப்பிய இலக்கணத்தை ஒட்டியே பிற்காலச் சங்கப் புலவர்கள் நூல்கள் இயற்றினர். சங்க விலக்கியங்களை ஒட்டித் தமிழர் வரலாறு திருத்தி எழுதப்பட வேண்டும்.

பத்துப்பாட்டில் முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்ற நான்கும் அகப்பொருள் பற்றியவை. நெடுநல்வாடையைச் சிலர் புறத்துள் அடக்குவர். ஆனால், அது பெரும்பாலும் அகப்பொருள் பற்றியதாகலின் அதை ஓரளவு அகத்துள் அடக்கலாம். மதுரைக் காஞ்சியும், மற்ற ஐந்து ஆற்றுப்படைகளும்—திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்

படை, கூத்தராற்றுப்படை—என்பவை—புறப்பொருள் பற்றியவை.

இவற்றுள் மதுரைக் காஞ்சி என்பது பத்துப்பாட்டிலேயே மிக நீளமான பாட்டாகும். வெற்றிச் சிறப்புக்கள் பெற்ற பாண்டிய அரசனுக்கு உலக நிலையாமையை எடுத்தோதுவது. இதில் கள்வர்களைப் பற்றிய விளக்கப் பகுதி ஒன்றுண்டு. அப் பகுதியிலிருந்து அக்காலத்தில் களவு நூல்கள் இருந்தனவென்றும் அறிகிறோம்.

ஆற்றுப்படைகள் கொடைவள்ளல்களின் சிறப்புக்களைப் பரிசில் வாங்கி வரும் ஒருவன் பரிசிலுக்காக அலையும் பிற பரிசிலரை ஆற்றுப்படுத்தும் வழியாக, எடுத்துக்கூறுகின்றன. இவற்றிலிருந்து அக்கால மக்களின்—சமுதாயத்தின் அமைப்பையும், வரலாற்றையும் நன்கறியலாம். ஆற்றுப்படைகளுள் திருமுருகாற்றுப்படையில் ஒரு புரட்சி உண்டு. இதில் பாட்டுடைத் தலைவன் தமிழ்க் கடவுளான முருகப்பெருமானாகும். முருகனிடம் சென்று வழிபட்டால் இவ்வுலக இன்பமும், மறுமையின்பமும் ஒருங்கே கிட்டும் என ஆற்றுப்படுத்துவது இந்நூலாகும்.

முல்லைப்பாட்டில் இயற்கைக் காட்சிகள் காணப்படுகின்றன. பூக்கள் மலரும் அழகைக் காட்டும் அடிகள் இவை.

"செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி."

அக்காலத்திலும் பெருவழிகள் (High Roads) இருந்தன. அவ் வழிகளின் மருங்கில் செறிந்த இலையுடைய காயா மரம், அஞ்சனம் போல் பூப் பூத்திருந்தது; கொன்றை பொன்போல் பூத்திருந்தது; கோடல் என்ற செங்காந்தள் மகளிரின் அங்கை போல இதழ் விரித்திருந்தது. தோன்றி இரத்தம்போல் சிவந்து பூத்திருந்தது.

மலைபடுகடாத்தில் வரும் ஒரு காட்சி நமக்கு வியப்பூட்டுகிறது. 'தீயினன்ன ஒண்செங் காந்தள்' மலரை ஒரு பருந்து இறைச்சித் துண்டமெனக் கருதி எடுத்துச் சென்றது. ஆனால் விரைவில் அஃது இறைச்சித்துண்டு அன்றென அறிந்து கீழே போட்டுவிட்டது. அஃது ஒரு பாறையின் மீது விழுந்தது. நெருப்புப்போல் காணப்பட்டது.

'பட்டினப்பாலை'க்கு ஆசிரியர் மறைமலையடிகளார் மேனாட்டுத் திறனாய்வு முறையில் ஓர் ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார். இப்பாடல் பெரும்பாலும் ஓரசை, ஈரசைச் சொற்களானியன்று ஒட்ட நடையுடையதாய்க் காணப்படுகிறது. "விளைவு அறாத அகன்ற கழனியிடத்து விளைந்த கரும்பினைப் பிழியும் ஆலையினின்று எழும் தீக்கதிர்களால் அருகில் மலர்ந்திருந்த நெய்தல் மலர்கள் கவின்வாடியிருந்தது. பூக்கள் சாம்பியிருந்த அவ்விடத்தில் செந்நெல் கதிரைத் தின்னவந்த பெரிய எருமைகள் கன்றுகளுடன் படுத்துறங்கின" என்ற காட்சி இயற்கையைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் உள்ளது.

பட்டினப்பாலையிலிருந்து அக்கால அரசியல் பொருளாதார நிலைகளையு மறியலாம். அக்காலத்தில் 'பட்டினம்' என்றால் சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும். அஃது ஒரு துறைமுகப் பட்டினம், அங்கே வெளிநாட்டுப் பொருள்கள் பல வந்திறங்கின. இந்நாட்டுப் பொருள்கள் பல ஏற்றுமதி யாயின. அப் பொருள்களுக்குச் சுங்கம் வசூலிக்கப் பட்டது. இக்கால ஆட்சியாளர்க்கு அறிவுரை கூறுவதுபோல் ஆங்கே ஒரு பகுதி அமைந்திருக்கிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் பலமொழி பேசும் மக்கள் ஒருங்கு உறைந்தனர். ஆனால் அங்கே பொதுமொழி என்ற ஒரு மொழியில்லை. பொதுமொழி தேவையில்லாதிருந்தது. விரும்பியவர்கள் விரும்பிய மொழியைக் கற்றுக் கொண்டனர். அதனால் அது பழிதீர் பட்டினமாயும், 'புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும் முட்டாச் சிறப்பினை யுடைய பட்டினமாயும்' திகழ்ந்தது.

கடைசியாக நெடுநல்வாடையைப் பற்றிப் பேசுவோம்! நெடுநல்வாடை என்ற பெயரே அழகாக அமைந்திருக்கிறது. மாரிக்காலத்தில் வடக்கிலிருந்து வருவது வாடை. அக்காலத்தில் போர்செய்யமாட்டார்கள். போருக்குச் சென்றவர்கள் திரும்பி வருவார்கள். பிரிந்திருந்த தலைவிக்குத்தான் அது நல்வாடை. ஏனெனில் வாடை வந்ததும் போர்வயிற் பிரிந்த தலைவன் திரும்பி வருவான். பிரிவுக்காலத்தில் ஒருநாளும் ஏழுநாள்போலிருக்குமாகலின், 'நெடு' வாடை எனப்பட்டது.

வாடைக்கால வருணனையை நெடுநெல்வாடை ஆசிரியரைக் காட்டிலும் வேறு யாரும் சிறப்பாகக் கூறிவிடமுடியாது. "குளிர்மிகுதியால் மக்கள் கொள்ளிக்கட்டைகளில் கையைக் காட்டிக் கன்னங்களில் ஒத்திக் கொண்டனர். அன்பிற்குரிய கன்றைக்கூடப் பசு உதைக்கிறது. பறவைகள் மரங்களில் தங்க முடியாமல் கீழே விழுகின்றன; குன்றும் குளிர்ந்துவிட்டது போன்ற குளிர்ச்சி" என்று வருணிக்கிறார்.

இலக்கியம் வாழ்க்கையின் கண்ணுடி (miror of life) என்ற வகையில் பத்துப்பாட்டு விளங்குகிறது.

## சி. வை. தாமோதரம் பிள்ளை படத்திறப்பு

அடுத்துத் தொல்காப்பியத்தை முதன்முதல் பதிப்பித்த ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் படத் திறப்பு நிகழ்ந்தது. பிள்ளையவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது திரு. வ. சுப்பையாபிள்ளையவர்கள் குறிப்பிட்டவை : " திரு. தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்து முதல் பட்டதாரியாவார். உயர்தரக் கல்வி கற்பதற்காகத் தம் பெயரை மாற்றிக் கிறித்துவப் பெயராகச் செய்து கொண்டார். சார்லஸ் வின்ஸ்லோ தாமோதரம் என்று தம்மை அழைத்துக் கொண்டார். பின்பு தான் திருநீறணிந்து சைவராய்த் திகழ்ந்தார். அவர் பதிப்பித்த தொல்காப்பிய நூல்களுக்கும் பிற நூல்களுக்கும் சிறந்த பதிப்புரைகள் எழுதியுள்ளனர். அவை தனி நூலாகக் கற்றற்குரியன.

திரு. தாமோதரம் பிள்ளையவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மகாவித்துவான் **திரு. மே. வீ. வேணுகோ பாலப்பிள்ளை** யவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் :

திரு தாமோதரம் பிள்ளையவர்கள் இருமொழிப்புலமை மிக்கவர். அவர்காலத்தில் தமிழ் தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்தது. நூல் பதிப்பிக்கும் தொழிலில் ஈடுபடும் போதுதான் பதிப்பித்தலின் அருமை தெரிகின்றது. பிள்ளையவர்கள் வாழ்ந்த காலத்தில் சங்க விலக்கியங்கள் அச்சில் வெளிப்படவில்லை. அத ஞல்தான் பிளளையவர்கள் பதிப்பில் சில மேற்கோள்கள் பிழை பட்டுக் காணப்படுகின்றன. நான் தொல்காப்பியத்தைப் பதிப் பிக்கத் தொடங்கியபோதெல்லாம் பிள்ளையவர்களுக்கு முதல் வணக்கம் செலுத்திவிட்டுத்தான் தொடங்குவேன்.

பதிப்பின் அருமையைப் பற்றிப் பிள்ளையவர்கள் 'இந் நாட்டில் எனக்கும் சாமிநாத ஐயரவர்களுக்கும் தான் தெரியும்' என்று துணிவோடு சொன்ஞர்கள். நூலாசிரியர், உரையாசி ரியர், போதகாசிரியர் என்ற மூன்று ஆசிரியர்களைப் போலவே பதிப்பாசிரியரும் பெருமையுடையவர் என்ற நிலையைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்திய பெருமை அவரையே சாரும். பிள்ளை யவர்கள் ஒரு சட்டக் கலைஞராகத் திகழ்ந்தார். அவர் தமிழ்த் தொண்டில் ஈடுபட அவரது ஆர்வமே காரணமாகும். பதிப் பிக்கும் வேலை அவர்க்குப் பிழைப்பன்று. அவர் தமிழ்நாட்டின ரின் நலத்திற்காகவே வாணுள் முழுதும் உழைத்தார்.

## பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் படத்திறப்பு

மாலையில் பின்னத்தூர் நாராயணசாமி அய்யரவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து மாம்பாக்கம் அழகரடிகள் என்ற திரு. இவவழகனுர் ஆற்றிய உரையின் சுருக்கம்:

தற்காலத்துத் தமிழ்ப்பாண்டி மன்னராக வீற்றிருக்கும் தலைவரவர்கள் மதுரையில் வாழ்ந்துவருகின்றார்கள். அவர்கள் இன்று தலைமைதாங்குவதால் விழா மாட்சியுடையது. சங்கத் தமிழின் அருமை என்னவெனில் அது நன்கு ஆராயப்பட்டது. பலருடைய உணர்விலுண்டாகும் கருத்துக்களைச் சாணை பிடித்ததுபோல் தேர்ந்தெடுத்த கருத்துக்களைக் கொண்டது. அதனால்தான் 'ஆய்ந்த ஒண்டீந் தமிழ்' என்று உரைக்கப் படுகிறது. ஆய்வதால்தான் அது ஒண்டீந் தமிழ் ஆகிறது. ஆராய்தல் என்றால் நுட்பமாக அறிதல் என்று பொருள். சங்கத் தமிழில் தொடர்புகொண்டால் நாமும் நுட்பமடையலாம். ஏனெனில், சங்கநூல்கள் பொய்யடிமையில்லாத புலவர்களால் ஆக்கப்பட்டவை; உண்மையானவை. இயற்கையின் அடிப் படையில் அமைந்தவை.

சங்கப்புலவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அறவுரைகளை அருளுணர்வுடன் கூறுபவர்கள். அப்படிப்பட்ட பாட்டுக்கள் சேர்ந்த தொகைநூல்கள் சங்க-இலக்கியங்கள் எல்லாம் உணர்வு நலத்தின் அடிப்படையினின்று வந்தவை. அவற்றில் கலப்பில்லை. சங்கத்தமிழ் கலப்பில்லாத தூயதமிழ். சிவஞானபோதம் சிவனைச் 'சத்' என்று குறிக்கும். சத் என்றால் உண்மை. சங்கத்தமிழ் 'சத்'தானது. மேலும் ஒள்ளியது ஒள்ளியது ஒன்றால் தெளி வான பொருளுடையது என்று பொருள். அத்தமிழ் இனிமை யும் பயப்பதால் தீந்தமிழ் எனப்பட்டது. ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குமுன் தமிழ்ப்பெரியார்களால் ஆய்ந்து எடுத்து அமைத்த கருத்துக்களைக் கொண்டவையே சங்க இலக்கியங்கள்.

சங்க நூல்களில் 'நற்றிணை' என்ற நூலுக்கு உரை எழுதிய வரின் திருவுருவப்படமே இன்று திறந்து வைக்கப்பெற்றது. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் ஓர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர். அவர் இறக்கும்போது எனக்கு வயது 10 இருக்கும். அவரோடு பழகாதுபோயினும், அவர் எழுத்தைப் படித்து அவரை அறிந்துகொண்டேன். எழுத்தில் ஆசிரியர்கள் தங்களை மறைத்துக்கொள்ள முடியாது; எழுத்தே அவர்களைப் புலப்படுத்திவிடும் என்று அண்மையில் வெளிவந்திருக்கும் கோதண்டபாணிப் பிள்ளையவர்களின் 'ஈரடி இருநூறு' என்ற நூல் கூறுகிறது.

நாராயணசாமி ஐயர் ஒவ்வொரு பாட்டுக்கும் துறைவிளக்கமும் பொழிப்புரையும் எழுதியுள்ளார். அவை எளிய இனிய நடையில் அமைந்துள்ளன. அருஞ்சொற்களுக்கு விளக்கமும் தந்திருக்கிறார். உள்ளுறை இறைச்சி இவற்றிற்கு விளக்கமும் கொடுத்திருக்கிறார். ஆசிரியர் மறைமலையடிகள் இவ்வாசிரியரைப் புகழ்ந்து பாராட்டுவார். இவரே நம் காலத்தில் வாழ்ந்தவராய்ப் பிறர் செய்யாததைச் செய்துமுடித்த பெருந்தகையாளராய் விளங்கியவராவார். இவருடைய பொழிப்புரையை மூலப் பாட்டின் சொல்விடாமல் வரிதோறும் தெளிவான உரையாக இருக்குமாறு எழுதியுள்ளார். இவரைத் தற்காலத்து முதலுரை யாசிரியர் எனலாம். பிறசங்க நூல்களும், போதிய கருவிகளும் இல்லாத அக்காலத்தில் இவ்வளவு சிறந்த உரையெழுதியிருப்பது வியக்கத்தக்கது. நல்ல நூல் என்று நற்றிணை (ஒழுக்கத்தால் பெயர் பெற்ற 'நற்றிணை'க்கு) நல்ல உரையெழுதி அழியாப்புகழ் பெற்றார் நாராயணசாமி அய்யர் அவர்கள்.

## எட்டுத்தொகை

பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் அவர்கட்குக் கழகச் சார்பாக அமைச்சர் பக்தவச்சலனாரவர்களால் பொன்னாடைபோர்த்துச் சிறப்பிக்கப்பட்டது. அவர்கள 'எட்டுத் தொகை'யைப் பற்றி ஆற்றிய உரையின் சுருக்கம் :

தலைவரவர்களே, பெரியோர்களே!

கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையாபிள்ளையவர்கள் 'அரசரோடொன்னைச் சரியாசனம் வைத்த தகைமை'க்கு எவ்வாறு கைம்மாறு செய்வேன்? என் ஆயுள் நாளில் இவ்வளவு சிறப்புக் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை: கழக ஆட்சியாளர் அவர்கள் இலக்கியத்தோடு பழகிவருபவர். மனிதப்பண்பை வளர்க்கும் கருவி இலக்கியம் ஒன்றுதான். பழந்தமிழிலக்கியத்தை நாம் எங்கும் செழிக்கச் செய்யவேண்டும், எங்கணும் யாவரும் இலக்கிய நலமே பேசும் காலம் வரவேண்டும். நாம் பழந்தமிழ்ப் பண்பாட்டை மீட்டும் பெறவேண்டும். அதற்கான அறிகுறி இக்காலத்தில் தோன்றுகிறது. இவ்விழாவும் அதற்கு ஓர் எடுத்துக்காட்டே. இக்காலத்தில் எல்லோரும் சங்கவிலக்கியத்தைப் படித்தின்புறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் நாம் பூரிப்படையவேண்டும்: சில பத்தாண்டுகளுக்கு முன்பு 'மலைபடுகடாம்' போன்ற பெயர்கள் சங்கநூல்களைக் குறிக்கின்றனவா? வேறா? என்றறியமுடியாத நிலை தமிழகத்தில் இருந்து வந்தது.

கையடக்கமாக இருக்கவேண்டுமென்பதற்காகவே சிறந்த பாடல்களைத் தொகுத்துப் பழந்தமிழர் தொகைநூல்களை ஆக்கியிருக்கின்றனர்: எட்டுத்தொகையுள் 'நெடுந்தொகை' என்ற அகநானூற்றைக் களிற்றுயானைநிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்ததும் இக்கருத்துப்பற்றியே. 'கீழ்க்கணக்கு' என்ற தொகுப்பில் திருக்குறள் இருப்பது பொருத்தமில்லை. தமிழில் தலைசிறந்த அந்நூலைத் தனியிலக்கியமாகவே கருதலாம்.

## நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் படத்திறப்பு

**டாக்டர் மா. இராசமாணிக்கனார்** நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையின் சுருக்கம்:

தமிழக வரலாற்றில் இஃது ஒரு மிகச் சிறந்த நாள் எனக் கருதுகிறேன். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களை நான் 40 ஆண்டுகளாக அறிவேன். அவர் கரந்தையில் நான் படிக்குங் காலத்தில் பலமுறை சொற்பொழிவுகள் செய்தார். தஞ்சையில் உள்ள நடுச்சாலை என்ற ஊரில் கள்ளர் வகுப்பில் பிறந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வுகளில் எல்லாம் முதல்வராகத் தேறினர். இறுதிப் பண்டிதத்தேர்வில் முதன்மையாகத் தேறித் தங்கத் தோடாவைப் பரிசாகப் பெற்றார். இவர் எல்லா நூல்களையும் கையால் எழுதி வைத்துக்கொண்டே படித்தார். இப்போது அவர் குடும்பம் முழுவதும் தமிழ் மயமாக விளங்குகிறது. அவர் தம் புலமையை வெளிப்படுத்திச் செய்த திருவிளையாடற் புராண உரை கழகவழியாகவே வெளிவந்துள்ளது. அவர் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றுக் கொண்டிருக்குங் காலத்திலேயே அகநானூற்றிற்கு அரியதோர் உரை வகுத்தருளினர்.

நக்கீரர், கபிலர் போன்ற உரைநடை நூல்களை எழுதினர். தாம் பிறந்த மரபு வரலாறான கள்ளர் சரித்திரம், சோழர் வரலாறு முதலிய அரிய ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார்.

## பதினெண் கீழ்க்கணக்கு

பதினெண்கீழ்க் கணக்கைப்பற்றி முதுபெரும் புலவர் **மயிலை சிவமுத்து** அவர்கள் பேசியதன் சுருக்கம்:

" தமிழே வடிவமாக மதுரையிலிருந்து வந்து எழுந்தருளியிருக்கும் தெய்வம் போன்ற தலைவரவர்களே, பெரியோர்களே, கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக, அதுவும் பதினொன்றாக வைத்து ஒரு வெண்பாப் பாடப்பட்டுள்ளது. முப்பால் என்று

வேறொரு நூல் இருந்திருக்கலாமோ என்ற ஐயமுந் தோன்று கிறது. பாட்டை மாற்றியமைக்கவேண்டும் அல்லது திருக் குறளைக் கீழ்க்கணக்கிலிருந்து எடுத்துவிட்டுத் தனிப்பெரு நூலாக மதிக்கவேண்டும். பதினெட்டாவது நூலாக இன்னிலை யைக் கொள்வதா கைந்நிலையைக் கொள்வதா என்ற நிலை ஏற்பட் டிருக்கிறது. இரண்டையுமே வைத்துக்கொள்ளலாம்; திருக் குறளை எடுத்துவிட்டு இவ்விரண்டையும் ஏற்றுக்கொண்டால் பதினெட்டு நூல்கள் என்ற எண்ணிக்கையும் சரியாக உள்ளது.

சில ஆண்டுகட்கு முன்பு சங்க இலக்கியம் இரும்புக்கடலை போன்றதென்றும், அதைக் கடலில போய்த்தான் கொட்ட வேண்டும் என்றும் சிலர் பேசிவந்தனர். ஆனால் அவ்விலக்கியங் களை இன்று இளைஞரும் எளிதில் பொருளுணர்ந்து கொள்ள முடியும: சங்கநூல் என்றால் என்னவென்றே தெரியாதிருந்த காலத்திலேயே அந்நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினர்: சங்க நூல்களை எல்லோரும் அறிந்து படித்தின்புற வழி செய்தனர். சங்கவிலக்கியங்களில் வரும் சொல்லோவியங்களை வண்ண ஓவியங் களாகத் தீட்டினால் பார்ப்பவர்க்கு அந்நூற்கருத்துக்கள் எளிதில் விளங்கும்.

## நூற்காட்சிச் சிறப்பு

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் நூற்காட்சியினைக் கண்ணுற்று உளங்கனிந்து உணர்ச்சி ததும்ப ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

நம்முடைய முன்னோர்கள் சொத்தாக நமக்குக் கிடைத் துள்ள அரும் பெருங்கருவூலச் சங்க நூல்கள் எண்ணிக்கையில் சுருங்கியவாயினும் இயல்பில் மிகப் பெரியனவேயாகும். இவைகள் இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னுள்ளன. இவற்றுக்கு முன்னுள்ள சங்க நூல்கள் அளவில்லன இறந்தொழிந்தன. கடைச் சங்க நூல்களுள்ளும் பல இன்னும் வெளிவராதிருத்தலுங் கூடும். அவற்றையும் முயன்று தேடி வெளிப்படுத்துதல் நம் கடனாகும். சங்க நூல்களைப் போலப் பின்னுள்ள நூல்களையும் பேணுதல் வேண்டும்.

தேவநாகரி எழுத்துத் தமிழ் மொழிக்கு ஒரு சிறிதும் பொருந்தாது. தமிழெழுத்தொலி தனிச் சிறப்பு வாய்ந்தது. மென்மையுடையது; இயற்கையோடொத்தது; இனிமை வாய்ந் தது. மூச்சுச் செட்டோடொலிக்கும் மாண்புடையது. தேவ நாகரி எழுத்துச் செயற்கை முறையது. அடிவயிற்றிலிருந்து பேரொலி எழுப்பி ஒலிக்குந்தன்மையது. அளவிறந்த மூச்சு

வீணுக்க வேண்டிய அமைப்புடையது. ஆதலால் தேவநாகரி எழுத்துத் தமிழுக்கு ஒருகாலத்தும் ஒவ்வாது.

பல மொழியாளர்கள் தங்கள் மொழிகளை நெடுங்காலம் பேச்சு மொழியாகக் கையாண்டு வந்தனர். அவர்களுக்கு எழுத்து வடிவமில்லாதிருந்தது. எழுத்து வடிவம் அமைந்துள்ள பிறமொழியாளருடன் கலந்த பின் அவர்களும் தங்களுக்கு எழுத்தாக்கிக் கொண்டனர். சிறப்பாக இந்திய நாட்டிற்கு வந்த பிற நாட்டார் தமிழருடன் கலந்துறவாடிய பின்னரே தங்கள் மொழிக்கு எழுத்தமைத்துக் கொண்டார்களென்பது வரலாறு கண்டவுண்மை. தமிழெழுத்துத் தமிழ்மொழி போன்று வரலாற்றுக் காலத்துக்கு நனிமிக முற்பட்டதாகும். அத்துணைப் பெருமை வாய்ந்த அவ்வெழுத்தை யிழந்துவிட யார்தான் உடன்படுவர். உயிருக்கு உடல்போல் மொழிக்கு எழுத்தாகும்.

எத்துணைச் சிறப்பென்று எவர் கூறினும் முன்னோர் சொத்தினை இழக்க எவரும் ஒருப்படார். எடுத்துக்காட்டாக எனக்கு ஊரவர் பேருதவியாற் கிடைத்த பெரும் பொருளிலிருந்து வாங்கப்பட்டதோர் அழகிய வளமனை. என் அருமை மனைவியார் தம் ஈன்றுராால் கொடுக்கப்பட்ட மகட் கொடைச் சிற்றில்லை முன்னோர் வைப்பென உளமார மொழிந்து புதிய வளமனைக்கு வர மறுத்துவிட்டனர். மேலும் வேண்டுமானல் யான் மட்டும் போயிருக்கலாமெனவும் இயம்பியுள்ளனர்.

"இவ்வுண்மையினைச் செவிமடுத்த எவரே தம் முன்னோர் தனிப்பெரும் வைப்பாம் சங்க நூல்களை இழக்க இசைவர். அதுபோல் எவரே தம் முன்னோர் வைப்பாம் தமிழெழுத்துக்களைக் கைவிட்டிட மனம் ஒருப்படுவர்; தமிழெழுத்தின் அருமை பெருமைகளை நூற்காட்சியின்கண் வைக்கப்பட்டிருக்கும் எழுத்தோவிய விளக்கப்படங்களால் நன்குணரலாம்" என்று கூறி முடித்தார்.

இறுதியில் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் தலைவர் அவர்கட்கும், பிற சொற்பொழிவாளர்கட்கும், விழாவிற் பங்குகொண்ட அனைவர்க்கும் நன்றியுரை நவின்றனர்.

சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா

# வாழ்த்துக்கள்

மக்கள் தமிழறிவு வாய்ந்துயர்வு பெற்றிலகத்
தக்கதுணை சங்கத் தமிழ்ஆகும்—மிக்கஅதைப்
பண்புபெற அச்சிட்டுப் பாரினர்க்கீ யுங்கழகம்
நண்புபெற வாழ்கபல நாள்.

வாழ்கதமிழ்ச் சங்க மருவு மிலக்கியநூல்
வாழ்கசைவ சித்தாந்த வண்டமிழ்நூல்—வாழ்கவே
தண்டமிழ்நூல் கற்குமவர், சந்ததமும் சுப்பையனார்
மண்டலத்தில் வாழ்க மகிழ்ந்து.

—தி. செ. முருகதாசன், திருவாமாத்தூர்.

சங்கத் தமிழர் வாழ்வியலைச்
சாற்றும் தமிழின் மாண்பனைத்தும்
எங்கும் யாரும் இனிதுணர
எளிதாம் வகையில் எடுத்துரைக்கும்
பொங்கு மகிழ்வில் புவியுள்ளோர்
போற்றும் கழகப் புதுநூல்கள்
எங்கும் என்றும் வாழியவே!
இன்பத் தமிழ்போல் வாழியவே!

—பொ. முத்தரசு, திருவைகுண்டம்

“சைவசித் தாந்தக் கழகத்தைச் சார்பதிப்பாய்
மெய்யுரை யோடு வெளிவந்து—தெய்வமணச்
சங்கநூல் யாவும் சகலமும் கற்றுயரப்
பொங்கி விளங்குமின்று போற்று”

—இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, நெல்லை.

சித்தாந்த நூற்பதிப்புச் சீரியோர் சங்கத்தின்
வித்தார நூல்கள் வெளியிட்டு—ஒத்தார்
எவருமில்லை என்ன விழாவயரும் கற்றோர்
திடமாக வாழ்க சிறந்து

—ஈ. மு. கோவிந்தராய நாட்டார், தஞ்சை.

ஆயிரத் தெட்டு நூல்கள் அழகுடன் பதித்துத் தந்து
தாயெனத் தமிழைச் சைவ சமயத்தைக் காத்து நின்று
மாயிரு ஞால மெல்லாம் மாண்புடன் பரவச் செயயும்
தூயநற் கழகம் வாழ்க ! தொண்டுளம் வாழ்க மாதோ.

துங்கத் தமிழ்ப்புலவர் தூத்தமிழில் செய்தளித்த
சங்க விலக்கியங்கள் சார்பு பெற—நங்கள்
கழக வெளீயீடு கைக்கொண் டுலகம்
பழகிப் பயன்பெறுமால் நன்கு.

—சே. வேங்கடராமன், சிதம்பரம்.

எங்கள் உயிரதாம் சங்கநூல் ஓங்கிடவே
பொங்கும் கலைமிகு தந்தையாம்—தங்கும்
புகழ்சேர் கருமுததுப் பூமான் தலைமைதனில்
திகழ்கவே வெற்றி சிறந்து.

—கி. பழநியப்பன், சென்னை.

உலகெலாம் போற்றும் தண்டமிழ் மதுரையில்
கலையெலாம் வளர்க்கும் கல்விச் செல்வர்
ஆலை வேந்தர் அருங்கலைச் செல்வர்
ஞாலம் வியக்கும் நற்றிற ஞளர்
திருமலை மன்னன் என்னத் திகழும்
கருமுத்து தியாக ராசர் கலைஞர்
தலைமையில் நிகழும் சங்க விலக்கிய
வெளியீட்டு நிறைவு விழாமிக இனிதாய்
நடைபெறுவ தாக நந்தமிழ் வாழ
முடியா வினையும் முடித்துக் காட்டும்
கழக வினைவலார் சுப்பையா ஏந்தலும்
வழிவழி வாழி தண்டமிழ் போற்றியே.

—அ. கி. பரந்தாமனுர், மதுரை.

சங்கநூல் முற்றுந் தகவுறவே நல்லுரையும்
இங்கியல வேபதிப்பித் தின்புற்ற—பொங்குபுகழ்
நோற்றசைவ சித்தாந்த நூற்பதிப் புக்கழகம்
ஆற்றலுற வாழியபல் லாண்டு.

—புலவர் அரசு, சென்னை.

---

## சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா

# வாழ்த்துரைகள்

சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா அழைப்பிதழ் கிடைத்தது. மகிழ்ச்சி. விழா இனிது நிறைவேற மேதகு ஆளுநர் அவர்கள் தம் வாழ்த்துக்களைக் கழகத்தார்க் குரித்தாக்குகின்றூர்.

சென்னை ஆளுநரின் அணுக்கச் செயலாளர்.

கழகம் அரும் பெரும் இலக்கியப் பணி ஆற்றி வருகின்றது. இவ்விழா இனிது நிறைவேற வாழ்த்துகிறோம்.

—ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
தருமபுர ஆதீனம், தருமபுரம்.

தாங்கள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வெளியீட்டுத் துறைக்கும் ஆற்றியிருக்கும் பெரும்பணி எல்லோராலும் பெரிதும் பாராட்டுவதற்குரியதாகும்.

—மு. அண்ணமலை, எம்.ஏ., சிதம்பரம்.

தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் தங்களது இம்மாதிரி வெளியீடுகளின் மூலம் செய்துவரும் தொண்டிற்குத் தமிழ்நாடு மிகவும் கடமைப் பட்டுள்ளது.

—K. M. நாகலம்மாள், திண்டுக்கல்.

நம்நாட்டுப் பழம்பெருமையை உலகத்தாருக்கு உள்ளவாறு எடுத்துக்காட்டும் சங்க இலக்கிய வெளியீடுகளை நன்ருகவும் செம்மையாகவும் வெளியிட்டு உதவிய தங்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

—தணிகை அரசு, வாலாசாபாத்.

புதைபொருள் போல் கிடந்த சங்க இலக்கியங்களை அரும் பாடுபட்டுத் தேடி அரிய உரைகளையும் கண்டு, பட்டி தொட்டி களிலெல்லாம் பரப்பிய தங்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொண்டு என்றும் மறக்கற்பாலதன்று. தமிழ் கூறும் நல்லுலகம் இதற்கு என்றும் கடமைப்பட்டு இருக்கிறது.

தங்கள் வெளியீடுகள் யாவும் எளியஉரை, அழகிய எழுத்து, கண் கவர் கட்டு அமைந்து, காண்போரைக் கவர்ந்து படிக்கத் தூண்டுகிறது. உணர்தற்கு அரிய சங்க இலக்கியக் கருத்துக்களை, சந்தி பிரித்து அச்சிட்ட தங்கள் அச்சகத்தையும், அதன் தொழிலாளர்களையும் மறக்க இயலாது.

—தி. லோ. முத்துசாமி, பி. ஏ. எல். டி., சேலம்.

இயற்கையில் தோய்ந்து அதன் எழிலார் உருவில் இணைந்து இறைவனை யுணர்ந்து கண்டனர் நம் முன்னோர். விலை மதிக்க முடியாத மணியை நுண் வெண் பட்டாடையில் பொதிந்து வைப்பது போன்று அம் முழுமுதற் பொருளை இனிக்கும் தமிழ்ப் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். அப் பாடல்களின் தொகுப்பை ஒப்பற்ற முறையில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை இன்பத் தமிழக மதிப்புக்குரிய இராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் முதலியவர்களுக்கு உண்டு. இன்று அச் செந்தமிழ்த் தேனைப் 'பருகுமின், பருகுமின்' என்று மலிவாக வாரி வழங்கும் பெருமை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கே உரியது.

—சா. குரூஸ் அந்தோணி, எம். ஏ., பாளையங்கோட்டை.

சங்க இலக்கியங்கள் பழந் தமிழ்நாட்டை அன்றைய தமிழ்ப் பெருங்குடியினரின் வாழ்வை— பண்பாட்டை— நாகரிக மேன்மையை— சமய நெறியை எடுத்து விளக்கும் இனிய தமிழ் நூல்கள். அவற்றைத் தேடித் தொகுத்து, வகுத்து, முறைப் படுத்தித் தமிழ் உலகிற்கு வழங்கிய முதுபெரும் புலவர்களும், அந் நூலை அழகுறத் தெளிவாகப் பதிப்பித்தளிக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும் பாராட்டுக்குரியவர்கள்.

—தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

கழகம் இதுகாறும் தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிவரும் அரும் பெரும் பணிக்கு இவ் வெளியீடு ஒரு முத்தாய்ப்பு வைத்தாற் போன்றதாகும். மறந்து, மறைந்துவிட்ட சங்க இலக்கியங்களை மீண்டும் புத்துயிரளித்துத் தமிழ் மக்கள் அந்நூல் களின் இன்பத்தை நுகருமாறு கழகம் செய்துவந்துள்ள பெரும் பணியை யாவரும் போற்றற்குரியதாம்.

—ஜி. ஆர். தாமோதரன், கோயம்புத்தூர்.

சங்க காலம் என்பது தமிழகத்தின் பொற்காலம். அதன் சிறப்பை விளக்கும் கண்ணாடியாக விளங்குவன சங்க இலக்கியங் கள். விரிந்த பரந்த அச் சிறந்த நூல்கள் முப்பத்தாறனையும் நிறுவனம் ஒன்றே வெளியிடுவது அருமை. எல்லோரும் விரும்பி வாங்கிக் கற்கும் வகையில் கவர்ச்சியுடன் வெளியிடுவதோ அருமையிலும் அருமை. அத்தகு அருஞ் செயலைத் தொடர்ந் தாற்றிய பெருமை, தமிழகத்திற் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒன்றற்கே வாய்த்தது.

—இராம. கனகசபாபதி, நெல்லை.

ஒரு காலத்தில் மாக்மில்லன் புத்தகநிலையத்தினர் வெளியிட்டு வந்த ஆற்றல்மிக்க கட்டுக்கோப்பமைந்த ஆங்கில நூற்கள் போன்று தமிழ் நூற்களைக் காணப்போகின்றோமோ? காண இயலுமோ? என்று கனவு கண்டு வந்தோம். ஆனால் கனவு நினைவாகியது. நினைவிலும் கனவிலும் நம் உயிரினுமினிய தீந்தமிழ் மொழியல்லால் வேறொன்று குறித்து அறியாத சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினராலன்றி வேறு யாரே இப் பணிகளைச் செவ்விதின் முடித்துத் தர இயலும்.

அயல் நாட்டு நிலையங்களும் வியந்து போற்றும் வண்ணம் சிறந்த கட்டட அமைப்புடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள் விளங்குவன தமிழ் மக்களுக்குப் பெருமை தேடித் தரும் பெருஞ்செயலாகும்.

—மயிலை சிவ. முத்து.

அரிய பெரிய விரிவுடைய இந்நூல்களை வெளியிடுவது தங்கள் கழகத்தையன்றிப் பிறிதொரு பதிப்பகத்திற்கு இயலாததொருசெயல் என்பதைத் தமிழகம் அறியும்முன்னர் இந்நூல்களை வெளியிட முயன்ற அறிஞரெல்லாம் ஒன்றிரண்டே வெளியிட்டு அமைதியுற்றனர். ஆனால் கழகமொன்றே முனைந்து நின்று ஒரு தலையாய கடனெனவும், சிறந்த தமிழ்ப் பணியெனவும் நினைந்து பணியாற்றியது. ஆதலின் இவ் வகை கழகம் புரிந்த தமிழ்ப் பணி அரிது அரிது! என்று பெரிதும்வாழ்த்தியே ஆகவேண்டும்.

—வித்துவான் அ. க. நவநீதகிருட்டிணன், நெல்லை

சங்க நூற்களை வெளியிட்டு நம் தமிழ் இனத்தின் மாண்பை இன்றும் நிலைநாட்டும் நம் கழகத்தின் முயற்சியைப் பாராட்டல் யாவர்க்கும் மகிழ்வளிப்பதாகும்.

—பண்டி. திருநாவுக்கரசு, தூத்துக்குடி.

“கழகத்தின் திருப்பணி தமிழன்னையின் பெருமைக்கு ஒரு அணிகலன்.”

—சோ. பழனிக்குமார், நெல்லை.

கழகம் இன்றைய தேவைகளை யுணர்ந்து, பழமைகளில் பழமையும், புதுமைக்குள் புதுமையுமாய நூல்களைத் தக்காங்கு வெளியிட்டுவருதலைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

—அ. கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

இதுபோன்று மேலும் பல நிறைவு விழாக்களை எடுத்துத் தமிழ் நலம்பேண விழைகின்றேன்.

—செந்துறை முத்து, சேலம்.

தமிழன்னையின் பழங்கலன்களாம் நன்னூல்கள் பலவற்றைப் புதுக்கி மெருகேற்றி அணிவிக்கும் நற்பணியை மேற்கொண்டு தளர்வின்றிச் செய்து வருகின்ற சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரைப் பாராட்டுகிறேன்.

—திரு ஐயன்பெருமாள் கோனார், திருச்சி.

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஒரு பதிப்பகத்தாரே வெளியிடுவதென்றால் அதற்கு எத்தனை பொருள், முயற்சி உழைப்பு, வேண்டுமென்பதையும் உலகு நன்கு உணரும்.

—ந. சண்முகன், திருத்துறைப்பூண்டி.

திராவிட மொழிகளுள் எவற்றிற்கு மில்லாத பெருஞ் சிறப்பைச் சங்க இலக்கியங்களின் அரிய வெளியீட்டின் காரணத்தால் தமிழுக்கே உண்டாக்கியுள்ளீர்கள்.

—ஜே. எம். சோமசுந்தரனார், அண்ணாமலைநகர்.

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களது பொதுமறை யாகும். வாழ்வியலை அறிவு, உணர்வு, செயல், சொல், என்பவற்றைச் செம்மை செய்து இனிது விளக்குவதோடு; வாழ்க்கையின் அடிநிலை உண்மைகளையும் முடிநிலைக் குறிக்கோளையும் எடுத்துக் காட்டி உபகரிப்பவை.

—க. வச்சிரவேலு முதலியார், B. A. L. T., காஞ்சிபுரம்.

தமிழ்த் தெய்வம் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களும், தங்கள் கழகமும், தமிழகத்தில் தோன்றியிருக்கா விட்டால் தமிழின் நிலையையே எண்ணிப்பார்க்க இயலாது. இவ்விரு தோற்றங்களும் தமிழன்னையின் தவப்பயனே என்றெண்ணி உள்ளங் களிக்கின்றேன்.

—வித்துவான் மு. இராமகிருட்டிணன், வேங்கடாசலபுரம்.

சங்க இலக்கிய வெளியீடு, இலக்கியச் செலவில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொரு தொலை கல்லாகும். தமிழகத்தின் மாண்பே பொதுளிக் கிடக்கின்றதெனில் அது மிகையாகாது. இத்தகையதொரு சீரிய பணி மேற்கொண்ட கழகத்தினரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

—எம். சுந்தரம், மதுரை.

காலத்திற்கு ஏற்ற முறையில் நல்ல விளக்கங்களோடு அழகிய பதிப்புக்களாக உள்ளவை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிட்டவையே என்பது எவரும் அறிந்ததொன்று. இது தமிழர் தம் தவப்பயனேயாகும்.

—ரா. தேசிகன், புதுவை.

சங்க இலக்கியங்கள் நமது தமிழ் முன்னோர்களின் கவிதை ஊற்று. அறிவுக் களஞ்சியம். வாழ்க்கை விமரிசனம். ஆனால் பலாப்பழம் போன்றவை. தோலையும் சடையையும் கொட்டையையும் சிறிது சிரமப்பட்டு அகற்றிவிட்டால் எல்லாம் தித்திக்கும் தேமதுரச் சுளைகளாக இருக்கும். தற்காலத்திலே தமிழர்கள் அறிந்துகொள்ளக்கூடிய எளிய உரைவேண்டும். அது கிடைத்து விட்டால் தமிழர்பாடு கொண்டாட்டம்தான்.

—ஓ. வி. அளகேசன், சென்னை.

செந்தமிழுக்கு உறைவிடமும் செந்தமிழின் நிறைவிடமும் ஆன சங்க நூல்களைத் தக்க பெரியோர்களின் உரையுடன், அவை தம் அருமை பெருமை உலகுக்கு அளிக்கும் இந்நற் பண்பு "என்கடன் பணிசெய்து கிடப்பதே[1]" என்னும் அப்பர் பெருமானின் அறவுரையை நினைவூட்டுகின்றது.

—வ. சு. செங்கல்வராய பிள்ளை, சென்னை.

இதற்கு முன்னே பதிப்புக்கள் பல வந்திருப்பினும் ஒவ்வொரு குறையைப் பெற்றே அவை வழங்கி வந்தன. குறைவிலா நிறைவாய் விளங்கச் செய்தது நம் கழகமே. செயற்கரும் செயலினைச் செய்துகொண்டே வளரும் நம் கழகத்தினை மனமாரப் பாராட்டுகின்றேன்.

—கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்.

கழகம் தமிழுக்காகச் செய்துவரும் பணிகள் பல; பாராட்டத் தக்கன; பயன் அளிப்பன; நன்றிக்கு உரியன. இந்த விழா மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன். சங்க இலக்கியத்தின் நறுமணமும் புகழும் உலகம் அனைத்திலும் பரவவேண்டும். அதற்குரிய செய்யப்பட வேண்டும்.

—பெ. நா. அப்புஸ்வாமி, சென்னை.

பல விழாக்கள் உங்கள் கழகம் தமிழ் மொழி உள்ளளவும் அப்போதைக் கப்போது கொண்டாட வேண்டுமென்று தமிழ் மொழிக் குரிய தெய்வமாகிய முருகக்கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

—ப. சம்பந்தம், சென்னை.

முத்திறத்து முப்பத்தாறு நூல்களும் எத்திறத்தாரும் போற்ற இனியஎழில் வாய்ந்த உரை நலங்களுடன் வெளியிடும் சங்க இலக்கிய வெளியீடு விழா இனிது நடந்து மகிழ்வு வழங்குக.

—ந. சேதுரகுநாதன், விருதுநகர்.

கீழ்க்கண்டவர்களிடமிருந்தும், தந்திகள் மூலமும், கடிதங்கள் மூலமும் வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன.

திரு. ஈ. வே. சிங்காரவேலு B.A.L.T. கோயம்புத்தூர், கி. நரசிம்மன் பம்பாய், ச. சுப்பிரமணியன் சென்னை 5, எம். ஜி. ராமசந்திரன் சென்னை, மீனாட்சி சுந்தரம் சிதம்பரம், ப. சோதி முத்து மதுரை, மு. சடகோப ராமானுஜம் கருந்தட்டாம்குடி, நா. மகாலிங்கம் B. S. C. A. M. I. E. M. L. A. பொள்ளாச்சி, சபாபதி கல்கத்தா, எம். டி. வேலாயுதனார் பாண்டிச்சேரி, வித்துவான் செ. இராசு ஈரோடு, முனிசிபல் சேர்மன் அருப்புக் கோட்டை, எஸ். எம். காத்ரே M. A. P. H. D. (LONDON) பூனா, தி. கி. சுந்திரமூர்த்தி மதுரை, திரு. வித்துவான் க. வ. முத்தையா M. A. திருநெல்வேலி, தே. தியாகராசன் மதுரை, எஸ். எல். பாரதி காந்திகிராமம், ஆ. மாணிக்கம் சேலம், சி. ஆர். மயிலேறு M. A. அண்ணாமலைநகர், க. வெள்ளைவாரணன் அண்ணாமலை நகர், டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி மதுரை, ச. நடேசன் கரூர், வித்துவான் பொன். சுப்பிரமணியன் திருவிடைமருதூர், காரா வேலன் காரைக்கால், நூலகர் காந்தி கலைமன்றம் ராஜபாளையம், சுயம்பிரகாசம் பி. ஏ. பி. எல். கருந்திட்டைக்குடி, நாராயணன் மதுரை, பா. நாராயணன் திருச்சி மாவட்டம், பண்டித வித்துவான் சா. சாம்பசிவன் பசுமலை, வை. தட்சிணாமூர்த்தி கல்லுப்பட்டி, மதுரை, வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை சென்னை 6, இராமசாமி யடிகள் கோவை, தலைவர் ஆசிரியர் சங்கம் வாலாஜா பேட்டை, திரு வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ஈரோடு, சத்தியம் செட்டி சென்னை-1 க. சேதுராமலிங்கம் காளையார் கோவில், திருமதி வை. தில்லைக் காமாட்சியம்மாள் விருதுநகர், பாலசுப்பிரமணியம் விருதுநகர், எஸ். மீனாட்சி சுந்தரம் ஈரோடு, கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சி, R. பஞ்சநதம் பிள்ளை திருச்சி, சுப்புரெட்டியார் திருப்பதி, முத்து சென்னை, அளசிங்கார ஆச்சாரி சென்னை, ரா. விசுவநாதம் சாமிநாத ஐயர் நூலகம். சென்னை, வித்துவான், பி. சொ. சண்முகம் பிள்ளை சென்னை, சுந்தர சண்முகன் புதுச்சேரி, பூ. ஆ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், D. theol. h. c. Dr. Arno Lehmann, ஜெர்மனி, டாக்டர், திருமதி. பிரேம்லீலா வி. தாக் கர்சே, துணைவேந்தர் திருமதி நத்திபாய் தாமோதர் தாக்கர்சே பெண்கள் பல்கலைக் கழகம், பம்பாய்.

---

# சுனீதிகுமார் சட்டர்ஜியின் வாழ்த்துரை*

**சுனீதிகுமார் சட்டர்ஜி,** **மேற்கு வங்காளம்**
*மேல்சபைத் தலைவர்* *கல்கத்தா*

**ஆட்சிப் பொறுப்பாளர்,**
*தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
சென்னை 1.

*அன்பார்ந்த ஐயா,*

*எட்டுத்தொகையுள் ஒன்முன ஐங்குறுநூற்றை உரையுடன் வெளியிட்டுச் "சங்க இலக்கிய வெளியீட்டு நிறைவு விழா"வைச் சென்னை ராஜாஜி மண்டபத்தில் 29-10-61 இல் கொண்டாடுவதற்காக எமக்கு விடுத்த அழைப்புக் கிடைக்கப்பெற்றேம். நன்றி.*

*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழிலக்கியங்களைப் பாதுகாத்து வளர்த்து வரும் பணியில் தன்னை உரிமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. வாழ்ந்து வருகின்ற நிலைத்த பெருமையுடைய நல்லனவற்றைக் காக்கும் பணியையும், இன்றியமையாது வேண்டப்படும் புதிய பொருள்களையும் வளர்த்துப் பெருக்கும் பணியையும் கழகம் மேற்கொண்டுள்ளது. சங்கவிலக்கியமும், சிலப்பதிகார மணிமேகலைக் காப்பியங்களும் திண்ணமாய் இந்திய இலக்கியத்திலேயே மிகவும் தனிச்சிறப்புடையவையாகும். தமிழிலுள்ள மிகப் பழமைவாய்ந்த இந்நூல்களும் சைவ வைணவ நாயன்மார்களும் ஆழ்வார்களுமாகிய திருவடியுணர்வு கைவந்தாரும் முனிவர்களும் பாடியருளிய இறவாப்புகழுடைய பத்திப் பனுவல்களும் இந்திய நாகரிகததிற்கும், பண்பாட்டிற்கும் பெரும் புகழாய்த் திகழ்கின்றன. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் செய்துவரும் பெரும் பணிக்காக இந்திய அரசும் - தமிழக அரசும், பிற மாநில அரசுகளும்-தமிழிலக்கிய, இந்திய இலக்கியங்களைக் கற்கும் பிற நாடுகளும் ஆர்வமுடன் கழகத்திற்கு நன்றி பாராட்டுங் கடப்பாடுடையன. இப்போது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் எல்லாச் சங்க இலக்கியத்தையும் உரைகளுடன் வெளியிட்டுவிட்டதால், இனி வரன்முறையாக அவற்றை ஆங்கிலத்தில் வெளியிடவேண்டும் என்று யாம் கூற விழைகின்றேம். நூலின் ஒரு பக்கம் மூலத்தையும், அதன் எதிர்ப்*

---

*இஃது ஆங்கிலததில் அவா அனுட்பியுள்ள வாழ்த்துரையின் மொழி பெயர்ப்பாகும்.*

பக்கம் ஆங்கில நேர் மொழிபெயர்ப்பையும் அமைத்துப் புதிய வரிசையில் சங்க நூல்களை வெளியிடும் பணி மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்யின் தமிழிலக்கியச் செல்வம் இந்தியா முழுவதிலும் பிறநாடுகளிலும் பரவும். மக்கள் எல்லாரும் பழந் தமிழர்கள் உலக முழுமைக்குமுரிய வகையில் அளித்த இலக்கிய அருஞ்செல்வத்தினை அறிந்தின்புறவும் கூடும். இந்தச் சமயத்தில் மிகப்பெருமளவு வெற்றியுற்றுத் திகழ்க எனச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை வாழ்த்துகின்றேன்.

மேலும் தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் இறவாப் பெரும் புகழ் படைத்த பழந்தமிழிலக்கியங்களைத் தேடிக் கண்டுபிடித்து வெளிப்படுத்திய பெருங் கல்வி வல்லார்களாகிய மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதையர், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, பி. நாராயணசாமி ஐயர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை முதலியவர்களை நினைவுகூர்ந்து நம்மை நாமே உணர்ந்து கொள்ளச் செய்த அருள்செயலுக்காக கல்கத்தாவிலிருந்தே யாம் எம் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேம்.

தங்கள் மிகவும் உண்மையுள்ள,

(ஒப்பம்) **சுனீதி குமார் சட்டர்ஜி.**

**SABAH PATI**
**VIDHA NA-PARIS'AD**
**PAS CIMA VAN.GA**
**KALIKA TA.**

LEGISLATIVE COUNCIL
CHAIRMAN
WEST BENGAL
CALCUTTA.

October 27, 1961.

**The Managing Director,**
**South India Saiva Siddhanta Works**
**Publishing Society, Tinnevelly, Ltd.,**
**1/140, Broadway, Madras-1.**

Dear Sir,

I have to acknowledge with thanks your invitation to the "Celebration of the Completion of Sangam Publications" which will be held on the morning of Sunday, the 29th of October, 1961 at Rajaji Hall, Madras City, when the *Ainkurunuru* (with commentary, as one of the *Ettutohai*) will be released formally.

The Saiva Siddhanta Publishing House has dedicated itself to the task of conserving and extending the volume of Tamil literatue - it is for *kshema* or conservation of the good and abiding things that are already in existence, as well as for *Yoga* or addition of new things that are necessary and desirable. The Sangam literature, together with the two epics, the *Cilappatikaram* and the *Manimekalai*, certainly forms one of the most outstanding things in Indian literature, and these oldest books of Tamil, together with the deathless devotional compositions of the Saiva and Vaishnava Saints and Sages of Tamilnad the Nayanmars and the Azhvars, are among the glories of Indian Civilization and Culture. The Saiva Siddhanta Publishing Society deserve the thanks of the Indian body-politic, both in Tamilnad and outside Tamilnad, in the rest of India, as well as in all foreign countries where there is a study and appreciation of Tamil and Indian literature, for the great work it has been doing.

Now that the entire Sangam literature has been brought out by the Saiva Siddhanta Publishing Society, in the original with Tamil commentaries, I would suggest that these works should be systematically translated into English, and a new series may be inaugurated giving the Sangam works, in the original Tamil on one page and a literal English translation on the page opposite. In this way the wealth of Tamil literature will be spread all over India and abroad, and people will be able to appreciate the universal appeal of the literary achievement of the ancient Tamilians.

I wish the Saiva Siddhanta Publishing Society the greatest amount of success and in this connection, I also send from Culcutta my respectful salutations to the memory of the great scholars who discovered for Tamizhakam as well as for India the deathless master-pieces of Old Tamil-Mahomahopadhyaya Dr. U. V. Swaminatha Aiyar, Rao Bahadur S. V. Damodaram Pillai, P. Narayanaswami Aiyar, Pandita N. M. Venkataswami Nattar, M. S. Purnalingam Pillai, V. Kanakasabhai Pillai, among others, for enabling us know ourselves once again.

**(Sd.) Suniti Kumar Chetterji**

## ‘டாக்டர் சேதுப்பிள்ளை’

# வரலாற்று நூல் வெளியீட்டு விழா

திருநெல்வேலி வள்ளுவர் மன்றத்தில் 22—10—1961 ஞாயிறன்று காலை 9 மணி யளவில் ‘டாக்டர் சேதுப்பிள்ளை’ நூல் வெளியீட்டு விழாத் தொடங்கியது. விழாவிற்கு நெல்லை நகர் மன்றத் தலைவர் திரு. எல். குற்றாலலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினர். செல்வி கோமதியின் இறைவணக்க இன்னிசைக்குப் பின்னர்த் திருவள்ளுவர் கழகத் தலைவரும் ‘டாக்டர் சேதுப்பிள்ளை’ — வரலாற்று நூலாசிரியருமான திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அறிமுகவுரை நிகழ்த்தினர். பின்பு, துணைத் தலைவர் திரு. நெ. சுப்பிரமணியம், B. Com. வரவேற்புரை நிகழ்த்தினர். அதன் பின்னர் விழாத் தலைவரின் தலைமையுரை நடைபெற்றது.

விழாத் தலைவராகிய திரு. செட்டியார், ‘டாக்டர் சேதுப் பிள்ளை’ — நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்துப் பெருமகிழ்ச்சி யுறுவதாகத் தெரிவித்தார். டாக்டர் சேதுப்பிள்ளை, நெல்லை நகர் மன்றத்தில் நான்கு ஆண்டுகள் உறுப்பினராகவும், இரண்டாண்டுகள் மன்றத் துணைத் தலைவராகவும் (Vice Chairman) விளங்கிச் சிறப்பான நற்பணிகள் பற்பல ஆற்றியுள்ளார். ஆண்டுதோறும் நகர் மன்றம் நடாத்திவரும் பொருட்காட்சியை ஓராண்டில் திறந்துவைத்துச் சிறந்த வாழ்த்துரை வழங்கினர். அவ்வாண்டில் அப் பொருட் காட்சியால் நகர்மன்றத்திற்குப் பெருநிதி திரண்டது. அவர் தாம் தேடிய செல்வத்தில் பெரும் பகுதியை நெல்லை நகர் மன்றத்தைச் சார்ந்த மகப்பேறு மருத்துவமனைக்கு நன்கொடை யாக வழங்கியுள்ளார். தம் நூல்களின் வாயிலாகத் தொடர்ந்து வரும் வருவாய் அனைத்தும் அந்த மருத்துவமனையின் நடை முறைச் செலவுக்கே பயன்படுமாறு இறுதிமுறி எழுதிவைத் துள்ளதாக அறிகிறேன். புலவர்களில் இத்துணைப் பெருங் கொடையாளரைக் காண்பது அருமை. அவர் தம் புலமையாலும் வள்ளல் தன்மையாலும் நெல்லைமாநகருக்கும் தமிழுக்கும் தமிழ்ப் புலவர் மரபுக்கும் எல்லையற்ற பெருமையைத் தேடித்தந்துள்ளார். அன்னருக்கு நெல்லைமாநகர எல்லைக்குள் முக்கியமான இட மொன்றில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவது இன்றியமையாத வொன்று. அவருடைய வாழ்மனை யமைந்துள்ள தற்போதைய சுடலைமாடன் கோவில் தெருவை ‘டாக்டர் சேதுப்பிள்ளை தெரு’ என்று மாற்றியமைத்து அவருக்குப் பெருமையளிப்பதும் ஏற்றதொரு செயலாகும். இவ்வாறு விழாத் தலைவர் கூறித் தம் தலைமையுரையினை முடித்தார்.

பின்னர் நூல்வெளியீட்டுரையாற்றிய மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகிய பேராசிரியர் திரு. சி. இலக்குவனார், டாக்டர் சேதுப்பிள்ளையின் சிறந்த பண்புகளை விளக்கினார். அவர் தமிழ்ப் புலவர் உலகில் மட்டுமன்றிப் பிற மொழிப் புலவர் உலகிலும் பெரிதும் மதிக்கப்பெற்ற பெருந் தமிழ்ப்புலவர் அவர் தமக்கென அமைத்துக்கொண்ட தனிச் சிறப்புடைய எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்கு ஒரு புதிய எழுச்சியை உண்டுபண்ணினார் எதுகை மோனை தவழும் அவருடைய அடுக்கடுக்கான உரைநடை, தமிழுக்கே உரிய மிடுக்கான நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவருடைய இனிய சொல் வன்மை, கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் நல்விருந்தாய் விளங்கியது நம் பாரதநாடு குடியரசு பெறும் நல்ல நேரத்தில் அவர் தமிழின் தலைமைப் பீடத்தில் ஏறினார். அது தமிழர் செய்த தவம்; தமிழுக்குக் கிடைத்த தனிப்பெரும் பேறு. இவருக்கு முன் அந்தப் பீடத்தில் இருந்த பேராசிரியர் வையாபுரியாரே குடியரசு பெற்ற பின்னும் தொடர்ந்து இருந்திருப்பாராயின் தமிழுக்கு இன்று நாம் கண்டு மகிழும் ஏற்றமெல்லாம் வந்திரா. வாய்ப்பைப் பயன்படுத்தித் தாய்மொழியாகிய தமிழுக்கு உயர்வும் வளமும் காண்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர் டாக்டர் சேதுப்பிள்ளை. இன்று தமிழ் நாட்டு அரசில் தமிழன்னை அரியணை யேறுதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர்களில் தலையாயவர் சேதுப்பிள்ளை. அவருடைய வரலாறு தமிழ் நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பெற வேண்டும். அந்தப் பணியை மணியான முறையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் செய்துள்ளனர். டாக்டர் சேதுப்பிள்ளை மறைந்த ஆறு திங்களுக்குள் அவரைப் பற்றிய அரிய வரலாற்று நூல் வெளி வந்தது வியப்பினும் வியப்பாகும். இத்துணை விரைவில் அப்பெருமகன் வரலாறு வெளிவந்தது மிகவும் அருமை நம் தமிழகத்தில் புலவர்களின் வரலாறுகள் இன்னும் சரியான முறையில் வெளிவரவில்லை. புலவர் வரலாறு என்ற வகையில் முதன் முதல் வெளிவந்த நூல் ‘மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரிதம்’. அது பெரும் பகுதியும் நூலாசிரியராகிய உ. வே. சா. அவர்களின் சரிதமாகவே அமைந்தது.

மேலைநாட்டிலே புலவர் வரலாறு எழுதும் முறை வேறு, நம் நாட்டிலே புலவர் வரலாறு எழுதும் முறை வேறு. ஒருவர் எவ்வெத் துறைகளில் திறமை பெற்று விளங்கினரோ அவ்வத் துறை வல்லாராகக் கலைஞர், தோழர், தொண்டர், அறிவியல் அறிஞர், வீரர், வினைஞர், அமைச்சர், செயலாளர் எனப் பாகுபாடு செய்து எழுதுவது மேலை நாட்டு முறை. நம் நாட்டிலோ

ஒருவரது பருவங்களை வரிசைப்படுத்திப் பிறப்பு, குழந்தைப் பருவம், இளமைப் பருவம், மாணவப் பருவம், உத்தியோகப் பருவம், முதுமைப் பருவம் எனப் பாகுபாடு செய்து எழுதுவர். 'டாக்டர் சேதுப்பிள்ளை'—வரலாறு எழுதிய ஆசிரியர் புலவர் நவநீத கிருட்டிணனார் இரு நாட்டு முறைகளையும் பின்னிப் புதிய தொரு நெறியை வகுத்துக் காட்டியுள்ளார். அது வாசிப்பவர்க் குப் பெருஞ்சுவை யளிப்பதாக இருக்கிறது. 'டாக்டர் சேதுப் பிள்ளை' இருநாட்டு முறைகளையும் கையாண்டு கன்னித் தமிழை வளர்த்த வள்ளல். அந்த உண்மையை நூலாசிரியர், நூலின் அமைப்பு முறையிலேயே புகுத்திக் காட்டியுள்ள திறம் போற்றற் குரியதாகும். சேதுப்பிள்ளை வரலாற்றில் பிறர் அறிந்து கடைப் பிடிக்கத்தக்க அரிய உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து தொகுத்தும், வகுத்தும் கொடுத்துள்ள ஆசிரியர் திறம் பாராட் டற்குரியதாகும். இவ்வளவு சுருங்கிய காலத்திற்குள் இத்துணை விரிவானதொரு புலவர் வரலாற்று நூலை வடித்துக்கொடுத்த புலவர் நவநீதகிருட்டிணனார் இன்றைய தமிழ்ப் புலவர் உலகில் தமக்கொரு சிறந்த இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டார். அவர் ஆக்கியளித்துள்ள நூல்கள் பலவற்றுள் இது தலையாயது என்னலாம். புலவர் வரலாறு எவ்வாறு எழுதவேண்டும் என் பதற்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்த அரிய நூல் இது. நான் அறிந்த வரையில் இதைப்போன்றதொரு தமிழ்ப்புலவர் வரலாற்று நூல் தமிழில் தோன்றியதில்லை. அம்முறையில் இது முதல்நூல். இதனைப் பின்பற்றித் தமிழ்ப் புலவர் வர லாறுகள் தோன்றுமாயின் அது தமிழகத்திற்கும் உலகிற்கும் பெரும்பயன் விளைப்பதாகும். டாக்டர் சேதுப்பிள்ளை தோன்றி வாழ்ந்து மணம்பெற்று வளர்வுற்ற நெல்லையிலேயே திருவள்ளு வர் விழாவில் வள்ளுவர் மன்றத்தில் அவருடைய வரலாற்று நூல் வெயீட்டு விழா அமைந்தது அவருடைய அருந்தொண் டின் விளைவேயாகும். அவருக்கு நெல்லைமாநகரில் நல்லதொரு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டியது தமிழரின் தலையாய கடமை யென்று கூறி விழாத்தலைவரிடம் 'டாக்டர் சேதுப்பிள்ளை' வரலாற்று நூல் ஒன்றைப் பெருமகிழ்வுடன் வழங்கினார்.

அதன் பின்னர்ச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில், கழக ஆட்சிக்குழு உறுப்பினராகிய வித்துவான் திரு. வே. மாணிக்கவாசம் பிள்ளை, கழகப் பணிகளையும் டாக்டர் சேதுப்பிள்ளை நூல் வெளியீட்டையும் பாராட்டிப் பேசினர். நூலாசிரியரையும் பாராட்டி "திருநெல்வேலி, சுடலைமாடன் கோவில் தெருவுக்கு' டாக்டர் சேதுப்பிள்ளை தெரு' என்று பெயர் அமைக்குமாறு திருநெல்வேலி நகர்மன்றத்தாரை வேண்

டிக்கொள்ளல்.'' என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தனர். அதனைத் திருநெல்வேலி ஓய்வுபெற்ற மாவட்ட ஆவணக்களரி யதிபர்திரு. டி. எம். நெல்லையப்பபிள்ளை B. A. வழி மொழிந்து பேசினர்.

பின்பு பேராசிரியர் சி. இலக்குவனார், 'திருநெல்வேலி நகர் மன்றத்தின் துணைத்தலைவராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல்தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கி, நெல்லைமாநகருக்கும் தமிழுக்கும் நிறைந்த புகழைத் தேடித்தந்து மறைந்த டாக்டர் சேதுப்பிள்ளையவர்களின் உருவச்சிலையினை நகர்மன்ற எல்லைக்குட்பட்ட முக்கியமான இடத்தில் அமைக்குமாறு நகர் மன்றத்தாரை வேண்டிக் கொள்ளல்'—என்னும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினர். அதனை நெல்லை வள்ளல் திரு. சி. ச. அருணசலம் பிள்ளை வழிமொழிந்து பேசியதுடன், அந்த உருவச்சிலை மேலைத்தேர்த் தெருவில் சுடலை மாடன் கோவில்தெரு முகப்பிலேயே அமைக்கப்பெறுவது நலமென்றும் அதற்காகும் செலவினைத் தாமே மனமுவந்து தருவதாகவும் உறுதி கூறினர். இத்தீர்மானங்கள் இரண்டும் விழாவில் கலந்து கொண்ட மக்களின் ஆரவாரமான கைத்தட்டுதலுக்கிடையே ஒருமனத்துடன் நிறைவேற்றப்பட்டன. கழகத் தலைவரின் நன்றியுரையுடன் விழா, பகல் ஒரு மணிக்கு நிறைவுற்றது.

---

## தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி

# தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு 1962

இச் சங்கத்தினின்றும் ஆண்டுதோறும் நடத்தப்படும் **'தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு'** 1137 ஆம் ஆண்டு தைத்திங்கள் 17 ஆம் நாள் (30-1-62) திங்கட்கிழமை முதல் ஆறு நாட்கள் நடைபெறும். நம் தமிழகத்திலுள்ள புலவர் கல்லூரிகள் யாவும் தேர்வு இடங்களாகத் திகழும். சென்னை, திருநெல்வேலி போன்ற நகர்களிலும் தேர்வு நடைபெறும்.

புலவர் கல்லூரிகளிற் பயின்று சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் வகைத் தேர்வுகட்கு எழுதுகின்றவர்கள் அனைவரும் இச் சங்கத் தேர்வுகட்கும் 1961 திசம்பர் 30உ-க்குள் பொறுப்பாளர் அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**அ. க. நவநீதகிருஷ்ணன்,**
பொறுப்பாளர்,
**தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம்.**

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) தேவநாகரி எழுத்தும் திருச்சிமாநாடும்

கடந்த 15—10—61 இல் திருச்சியில், அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை யவர்கள் தலைமையில் திருச்சி எழுத்தாளர் சங்கத்தின் ஆறாவது இலக்கிய மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் தமிழ்மொழியின் ஆக்கம் குறித்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள், தேவநாகரி எழுத்தைத் தேசிய பொது எழுத்தாக ஏற்றுக்கொள்ள மறுத்தும், இந்தி பொதுமொழியாக்கப் படுமானால் தமிழ் எழுத்து தேசிய பொது எழுத்தாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் ஒன்று.

**குறிப்பு :** இத்தீர்மானம் மிக நல்ல தீர்மானமே. எனினும், இவ் விந்தியத் துணைக்கண்ட முழுதும் இந்தி நாகரிகத்துக்குட் படவேண்டும் எனும் முனைப்போடு காரியங்கள் நடை பெற்று வரும்போது தமிழ் எழுத்துக்களை எங்ஙனம் அவர்கள் தேசியப் பொது எழுத்தாக ஏற்றுக் கொள்வர் என்பதுதான் புரியவில்லை.

## (உ) கல்வி வளர இயக்குநர் காட்டும் புதுவழி

"நாட்டில் எல்லா மாநிலங்களும் தம்முடைய கல்வி நிலயங்களில் மாலைவகுப்புக்கள் நடத்துவதற்கும் அஞ்சல்மூலம் கல்வி கற்பிப்பதற்கும் கூடுதலான வசதிகளைச் செய்து தரவேண்டும்" என்று அண்மையில் கோவையில் நடைபெற்ற ஆசிரியர்கள் கூட்டத்தில் கல்வி இயக்குநர் பேசியகாலை குறிப்பிட்டார். உருசியாவில் தாம்கண்ட உண்மைகளைப் பற்றி எடுத்துக் கூறுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

**குறிப்பு :** கல்வி நிலயங்களின் எண்ணிக்கை, கற்க வேண்டியவர்களின் எண்ணிக்கையைவிட மிகக் குறைவாகவுள்ள நம் நாட்டில் இம்முறை நல்ல பலனைத் தரும். அரசினரும் கல்வித்துறையினரும் இதனைக் கவனித்து ஆவன செய்வார்களாக.

## (ங) தொலைக்காட்சி மூலம் கல்வி

தொலைக்காட்சி மூலம் கல்வியைப் பரப்பும் முயற்சியை இந்திய அரசினர் மேற்கொண்டுள்ளனர். இதன் ஆரம்ப விழா கடந்த 22-10-61 இல் புதுதில்லியில் நடைபெற்றது. கல்வி அமைச்சர் ஸ்ரீமாலி தொலைக் காட்சி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். தில்லிமா நிலத்திலுள்ள உயர்தரத் தொடக்கப்பள்ளிகளிலும் இத்திட்டம் விரைவில் செயல்படும், என்று கல்வி நெறியாளர் கூறினார்.

**குறிப்பு :** அறிவுக்கு விளக்கம் தருவதில் கட்புலன் முதன்மை யானது. அதற்குத் துணைசெய்யும் வகையில் தொலைக்காட்சி மூலம் கல்வியைப் பரப்புவது மிக மிக இன்றியமையாதது.

'கண்ணுடையவரென்போர் கற்றோர்' என்னும் பொய்யாமொழிக்கு ஆக்கம் தரும் வகையில் இத்தொலைக் காட்சி தில்லியோடு மட்டும் நில்லாது தமிழகத்துக்கும் விரைவில் வரும் என நம்புகிறோம். தமிழக அரசினர் அதற்கு முயல்வார்களாக. தொலைக்காட்சி மட்டுமல்ல. அறியாமையைப் போக்கும் பணியில் அறிவியல் கருவிகள் அமைத்தும் பயன் படுத்தப்படல் வேண்டும்.

## (௪) சிலப்பதிகார நாடக நாட்டியம்

சென்னை நாட்டிய கலாலயத்தின் தலைவர் பாரத நாட்டிய வித்துவான் திரு. மட. என். தண்டாயுதபாணி பிள்ளையவர்களின் மாணவியர் 14-10-61 இல், மயிலைக் கவின் கலைக் கட்டிடத்தில் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தலைமையிலும், திரு. ம. பொ. சி. அவர்கள் முன்னிலையிலும் சிலப்பதிகாரத்தை நாட்டிய நாடகமாக அரங்கேற்றினர். தலைவர்களும் ம. பொ. சி. அவர்களும் நாடக நாட்டிய மாணவியர்களையும் அவர்களின் ஆசிரியர் திரு. கோதண்டபாணிப் பிள்ளையவர்களையும் பாராட்டிப் பேசினர்.

**குறிப்பு :** இங்ஙனம் நாடகம் நாட்டிய மாக்கப்பட வேண்டிய காட்சிகள் பல நிரம்பியுள்ள இலக்கியங்கள் தமிழில் நிரம்ப உண்டு. நாட்டிய ஆசிரியர்களும் நாடக ஆசிரியர்களும் முனைந்தால் நாடக நாட்டியத் துறையில் காணப்படும் பழைய முறைகளை மாற்றிப் புத்துணர்ச்சியூட்ட வல்ல பல தமிழ் மணங் கமழும் புதிய நாடக நாட்டியங்களை உருவாக்கலாம். செய்வார்களா ?

## (௫) சிங்களக் கடலுக்கடியில் சிவலிங்கம்

3000 ஆண்டுகட்கு முற்பட்ட தென்று கருதப்படுகிற சிவலிங்கம் ஒன்று அண்மையில் இலங்கைத் திரிகோண மலையை அடுத்துள்ள கடலுக்கடியிலிருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளது. ஒருகாலத்தில் கடலுள் மூழ்கியதாகக் கருதப்படும், கோனேஸ்வரர் ஆலயத்திற்கும் இதற்கும் தொடர்பிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இந்த இலிங்கத்தின் குறுக்களவு 2 அடி. உயரம்4 அடி. எடை $\frac{1}{4}$ டன். கடலுக்கடியில் ஒருசினிமாப் படப்பிடிப்புக்காக முயன்றபோது இந்தச் சிவலிங்கம் கண்டெடுக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**குறிப்பு :** தமிழகத்துக் கடற்கரையை அடுத்துள்ள காவிரிப்பூம் பட்டினம் போன்ற துறைமுகங்களில் புதை பொருள் ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து பார்ப்பார்களாயின் இத்தகைய சமய, வரலாற்றுத் தொடர்புடைய சின்னங்களைக் கண்டெடுக்கக் கூடும். தமிழக அரசினர் இத் துறையில் முயல்வார்களாக.

## (௬) குருகுலத்துக்குச் சென்னையில் அலுவலகம் (கிளை)

சென்னை முல்லாசாயபு தெரு 1 எண்ணுள்ள இடத்தில் கடந்த விஜயதசமியன்று (19 - 10 - 1961) மாம்பாக்கம் குருகுலத்திற்குக் கிளை அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது. சென்னைக் குருகுல மாதர் திருமுறைத் திருநெறிக் கழகம் இந்த விழாவை முன்னின்று நடத்தியது. மயிலாப்பூர் திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள் குருகுலக் கொடி உயர்த்தி அலுவலகத்தைத் திறந்து வைத்து வாழ்த்தினார்கள். இதற்கு ஆட்சிக் குழு உறுப்பினர் 32 பேர். ஆடவரும் மாதரும் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். குருகுல மாணவி திருமதி நாகம்மையார் நன்றி கூற, அவர் புதல்வியார் மங்கள வாழ்த்துப் பாட விழா இனிது நிறைவேறியது.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

## ‘டாக்டர், சேதுப்பிள்ளை’ நூல் வெளியீட்டு விழா



விழாத் தலைவர் திரு. எல். குற்றாலலிங்கம் செட்டியாரிடம்
பேராசிரியர் சி. இலக்குவனார் நூலை வழங்குதல்



பேராசிரியர் சி. இலக்குவனார் நூல் வெளியீட்டுரை
நிகழ்த்துதல்

---

* நெல்லையில் 22-10-61 இல் நடைபெற்ற இவ்விழாபற்றிய செய்தி சென்ற இதழில் வெளிவந்துள்ளது.